# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,908—1970 මැයි 29 වැනි සිකුරාදා—1970.5.29

14,908 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு மே மாதம் 29 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் ... ... ... | 457 | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் ... | 482 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 460 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் . | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. ... | 477 | அந்நிய குடிவகை உத்தரவும் ஈட்டு விண்ணப்பங்களை ... | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் ... | 481 | ஏல விற்பனைகள் ... ... ... | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் ... ... | 481 | நானாவித அறிவித்தல்கள் ... ... ... | — |


### பதவிகள் — வெற்றிடம்

"இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்கும் பொருந்தும் பொது நிபந்தனைகள்"

1. *படிகள்*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

2. *சேவைக்குரிய நிபந்தனைகள்*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கரும முறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

3. *நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக் குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினுல் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சதவீதத்தையோ செலுத்தினும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துவீபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

4. *அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின்' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

எம். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அச்சகர்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆண்டு திசெம்பர் மீ 12 ந் உ.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல்வேண்டும்.

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க.ப.த.ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சி சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

குறிப்பு—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.

5. வேண்டிய தகைமைகள்— விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாகவிருப்பவராகும்.

6. யுத்தசேவைச் சலுகை—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், நியணைக்கும் படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. பிற தேவைகள்—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப் பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறுபடிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்கா.

---

## அரசகரும மொழித் திணைக்களம்

### நிரந்தர/தற்காலிக மொழிபெயர்ப்பாளர் பதவிகள் (சிங்களம்)

அரசாங்க மொழித்திணைக்களத்திலுள்ள சிங்கள மொழிபெயர்ப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களைக் கீழ்க் காட்டப்பட்டுள்ள மாதிரி எழுதி 1970, ஜூன் 13 ஆம் தேதி அல்லது அதற்குமுன் எனக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

2. **வேதனம்.**—பதவிக்குரிய ஆண்டு வேதன அளவுத்திட்டம் : ரூபா 6,600—180, 240—ரூபா 9,240 ; ஆண்டு வேதனம் ரூபா 8,280 வருவதற்குமுன் வினைத் திறமைகாண் தடையுண்டு.

3. **நியமன நியதிகள்.**—

**(அ) நிரந்தரப் பதவி :**

(i) பதவி நிரந்தரமானது ; உபகாரவேதனத்திற்குரியது. பதவிக்குத் தெரிவு செய்யப்படுபவர் வி. அ. உ. ச. நிதிக்கு உதவு தொகை கொடுத்தல் வேண்டும்.

(ii) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பகாரர் குறுகிய கால அறிவித்தல் கொடுத்ததும் நியமனத்தை ஏற்கத் தயாராயிருத்தல் வேண்டும்.

(iii) ஆங்கிலத்திலிருந்து சிங்களத்திற்கு அல்லது சிங்களத்திலிருந்து ஆங்கிலத்திற்கு மூல மொழிபெயர்ப்புச் செய்தல், பிற பகுதிகள் அனுப்பும் சிங்கள மொழிபெயர்ப்புக்களை மீளாய்தல், வேறு வழிகளில் அரசாங்க மொழித் திணைக்களத்திற்கு உதவி செய்தல் ஆகியனவே மொழிபெயர்ப்பாளரின் கடமைகளாகும். மொழிபெயர்ப்பாளர் உயர்ந்த இலக்கியத் திறனுடையவராயிருத்தல் வேண்டுமென எதிர்பார்க்கப்படும்.

**(ஆ) தற்காலிக பதவி.**—

(i) பதவி தற்காலிகமானது ; உபகாரச் சம்பளத்திற்குரியதல்ல. பதவிக்குத் தெரிவு செய்யப்படுபவர், ஒரு மாத கால அறிவித்தலுடன் நிறுத்தப்படுதல் கூடும்.

(ii) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பகாரர் குறுகிய கால அறிவித்தல் கொடுத்ததும் நியமனத்தை ஏற்கத் தயாராயிருத்தல் வேண்டும்.

(iii) ஆங்கிலத்திலிருந்து சிங்களத்திற்கு அல்லது சிங்களத்திலிருந்து ஆங்கிலத்திற்கு மூல மொழிபெயர்ப்புச் செய்தல், பிற திணைக்களங்கள் அனுப்பும் சிங்கள மொழிபெயர்ப்புகளை மீளாய்தல் வேறு வழிகளில் அரசகரும மொழித் திணைக்களத்திற்கு உதவி செய்தல் ஆகியனவே மொழிபெயர்ப்பாளரின் கடமைகளாகும். மொழிபெயர்ப்பாளர் உயர்ந்த இலக்கியத்திறனுடையவராயிருத்தல் வேண்டுமென எதிர்பார்க்கப்படும்.

4. **வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் பின் வரும் தகைமைகளையுடையர் என்பதற்குத் திருத்தியான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தில் சிங்களத்தையும் ஒரு பாடமாகவெடுத்துப் பட்டம் பெற்றவராக விருத்தல் வேண்டும் ; அல்லது,

(ஆ) பத்து ஆண்டு அனுபவம் பெற்ற சிங்கள மொழிபெயர்ப்பாள ராகவோ, சிங்கள எழுத்தாளர் அல்லது நூலாசிரியராகவோ விருப்பதுடன், பட்டதாரிகளுக்குக் குறையாத புலமைத் தகுதி யுடையவராயும் ஆங்கில அறிவு நிறையப் பெற்றவராயுமிருக்கிரு ரெனத் தேர்வுக்குழுவினர் திருத்திப்படும் படியாக எடுத்துக் காட்டக்கூடியவராயுமிருத்தல் வேண்டும் ;

(இ) 1970 மே 29 ஆம் தேதியன்று 25 வயதுக்குக் குறையாத வராயும் 50 வயதுக்கு மேற்படாதவராயுமிருத்தல் வேண்டும். (இந்த வயதெல்லைகள் ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர் களுக்குப் பொருந்தா).

(ஈ) சிறந்த நல்லொழுக்கமுடையவராயும் உடல் நலமுடையவராய மிருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பகாரர் பின்வருவனவற்றின் படிகளை (மூல இதழ்களை யல்ல) விண்ணப்பங்களுடன் இணைத்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் ; அல்லது (பிறப்பு பதியப்படாத விண்ணப்பகாரருக்கு) பதிவாளர் தலைமை அதிபதி வயது பற்றி வழங்கிய சிறப்புச் சான்றிதழ்.

**முக்கிய குறிப்பு.**—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்காய பிரமாணத்தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது.

(ஆ) கல்வித் தகைமை/உயர்தொழிற்றகைமை அல்லது கல்வி உயர் தொழிற்றகைமைகள் பற்றிய சான்றிதழ் ;

(இ) விண்ணப்பகாரரின் தகைமைகள், குணம், இப்பதவி வகிப்பதற் குரிய தகுதி ஆகியனபற்றி அண்மையிற் பெற்ற மூன்று நற் சான்றிதழ்கள் (ஏற்கனவே அரசாங்க சேவையிலிருக்கும் விண் ணப்பகாரர் இத்தேவையிலிருந்து விலக்களிக்கப்படுவர்).

**குறிப்பு.**—சான்றிதழ்களினதும் நற்சான்றிதழ்களினதும் படி கள் திருப்பியனுப்பப்படமாட்டா.

6. ஒரு விண்ணப்பப் பத்திரமோ அல்லது அது சம்பந்தமான கடிதமோ அஞ்சற் போக்குவரத்திற் காணாமற்போய்விட்டது அல்லது தாமதப்பட்டுள்ளது என்னும் முறைபாடு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சார்த்திகள் விண்ணப்பங்களைக் கடைசித் திகதிவரை தாமதப்படுத்து வராயின் அது அவர்கள் பொறுப்பாகும். அரசாங்க சேவையிலுள்ளவர் களிடமிருந்து குறிப்பிட்ட தேதிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள், அவ் விண்ணப்பங்கள் குறிப்பிட்ட தேதிக்கு முன் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவரிடம் கிடைத்திருப்பதுடன் அத்தலைவர், சுணக்கத்திற் குச் செல்லும்படியான காரணம் காட்டி, அதனை ஏற்றுக்கொள்ளுமாறு சிபாரிசும் செய்தாலன்றி, ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

7. விண்ணப்பங்களை அல்லது அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளை அரசாங்க மொழி அலுவல் ஆணையாளருக்கே விலாசமிட்டு அனுப்புதல் வேண்டும் ; இந்தத் திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோ கத்தரின் பெயருக்காயினும் அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் ஜூந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ,அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பங்கள் யாவும் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படும். விண்ணப்ப முடிவுத் தேதி கழிந்து மூன்று நாட்களுக்குள் அத்தகைய அறிவித்தலைப் பெருத விண்ணப்பகாரர் உடனே அரசாங்க மொழி அலுவல் ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டைப் பின்பற்றத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கு மாறு கேட்கும் உரிமையை இழந்தவராவர்.

பீற்றர் பி. அபயசேகர,
அரசகரும மொழி அலுவல் ஆணையாளர்.

அரசகரும மொழித் திணைக்களம்,
22, நீட் சாலை, த. பெ. இல. 598.
கொழும்பு 7,
1970 ம் ஆண்டு மே மீ 17 உ.

## அரசகரும மொழித் திணைக்களம்

### நிரந்தர/தற்காலிக மொழிபெயர்ப்பாளர் பதவிகள் (சிங்களம்)

1. முழுப் பெயர் (திரு./திருமதி/செல்வி) :————.
(பெரிய தனி எழுத்தில்)
(அ) குடும்பப் பெயர் :————.
(ஆ) பிற பெயர்கள் :————.

2. அஞ்சல் முகவரி :————.

3. (அ) 1970.5.29 ஆம் தேதியன்று சரியான வயது :—
ஆண்டு :————. மாதம் :————. நாள் :————.
(ஆ) பிறந்த தேதியும் இடமும் (பிறப்புச் சான்றிதழின்படி அல்லது வயது பற்றிய சிறப்புச் சான்றிதழின்படி இணைக்கப்படுதல் வேண்டும்) :————.

4. தேசிய இனமும், அது எவ்வாறு பெறப்பட்டது என்பதும் :————

5. (அ) விண்ணப்பகாரரின் தந்தையார் முழுப்பெயர் :————.
(ஆ) அவருடைய பிறந்த தேதியும் இடமும் :————.
(இ) அவருடைய தேசிய இனம் :————.

6. விண்ணப்பகாரர் மணமானவரா, மணமாகாதவரா, வாழ்விழந்த வரா என்பது (மணமானவராயின் மணமான தேதியும், பிள்ளை கள் எத்தனையென்பதும்) :————.

7. விண்ணப்பகாரர் பொதுக் கல்வி கற்ற பாடசாலைகளினதும், கல்லூரி களினதும் பெயர்களும், அவற்றிற் சேர்ந்த தேதியும், அவற்றை விட்டு நீக்கிய தேதியும் :————.

8. (அ) கல்வித் தகைமை/உயர்தொழிற்றகைமை அல்லது கல்வி உயர் தொழிற்றகைமைகள் ; தகைமைகள் பெற்ற தேதியும் வகுப்புப் பெற்றிருப்பின் எந்த வகுப்பு என்பதும். (ஆதார மாகச் சான்றிதழ்களின் படிகள் இணைக்கப்படுதல் வேண் டும்) :————.
(ஆ) சிங்களம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுடன் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைகள் :—
தமிழ் :————.
ஆங்கிலம் :————.

9. பின்வருவனவற்றிய விபரங்கள் :—
(அ) மொழிபெயர்ப்பு வேலையில் அனுபவம் உண்டாயின் தொடர் பான தேதிகளுடன் குறிப்பிடுக :————.
(ஆ) இலக்கியம் சம்பந்தமான வேலையில் அனுபவம் உண்டாயின தொடர்பான தேதிகளுடன் குறிப்பிடுக :————.

10. (அ) பாடசாலை அல்லது கல்லூரியை விட்டபின் செய்த தொழில், தொழிலிற் சேர்ந்த தேதியும் அதனை விட்ட தேதியும் பெற்ற வேதனமும் :————.
(ஆ) அரசாங்க சேவையிலிருப்பின் இப்பொழுதுள்ள நிலையும் ஆண்டு வேதனமும் :————.

11. விசேட உரிமைக் கோரிக்கைகள், தகைமைகள், பயிற்சி அல்லது அனுபவம் பெற்றிருப்பின் அவை பற்றிய விபரங்கள் :————.

12. சொந்த வாழ்க்கையில் விண்ணப்பகாரருடன் நன்கு பழக்கமான (பொறுப்பானவர்களும் உறவினர் அல்லாதவர்களுமான) நடுவர் மூவரின் பெயர், முகவரி, பதவிப் பெயர் ஆகியன :————.
1. ————.
2. ————.
3. ————.

13. இணைக்கப்படும் நற்சான்றிதழ்கள் வழங்கிய (உறவினர் அல்லாத) வர்களின் பெயர் ; பதவிப் பெயர் ஆகியன (அண்மையிற் பெற்ற மூன்று நற்சான்றிதழ்களின் படிகள், மூல இதழ்கள் அல்ல, இணைக்கப்படுதல் வேண்டும்) :————.

14. நீர் பணமுட்டின்றியிருக்கின்றீரா ? பணமுட்டிருப்பின் எவ்வளவு வரையில் இருக்கும் :————.

15. நீர் நிரந்தர பதவிக்குத் தெரிவு செய்யப்படாவிடின் தற்காலிக பதவி ஒன்றிற்கு நியமிக்கப்படுவதனை விரும்புவீரா ? :————.

இந்த விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதிப்படுத்து கிறேன். இதிலுள்ள விவரங்களில் எதுவாயினும் பொய்யாகவோ பிழை யாகவோ விருப்பது கண்டுபிடிக்கப்படின், அவ்வாறு கண்டு பிடிக்கப் படுவது தெரிவுக்கு முன்னராயின் தெரிவிக்குரிய என் தகைமைகளை இழப்பேன் என்பதையும், நியமனம் செய்யப்பட்ட பின் கண்டுபிடிக்கப் பட்டால் நட்டஈடு எதுவுமின்றிப் பதவியிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

தேதி :————.

5—603—29.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,908

## இலங்கை உர யாக்கம்

### பதவிகள் வெற்றிடம்

### III ம் தர எழுதுவினைஞர்களுக்கும் அதன் தரத்தில் உள்ள சேவைகளுக்கும் மற்றும் II ம் தர பண்டகசாலை பொறுப்பாளர்கள் சேவைக்குமான விண்ணப்பங்கள்

*மேற்கூறப்பட்டுள்ள சேவைகளில் இருக்கும் பதவி வெற்றிடங்களை (தற்பொழுது ஏறக்குறைய 20–25 தானங்கள்) நிரப்புவதற்கு இலங்கைப் பிரசைகளான விண்ணப்பதாரர்களுக்கிடையில் நடைபெறும் போட்டிப் பரீட்சையின் மூலம் நிரப்பப்படும்.*

**I. சம்பள அளவுத் திட்டம்.—**

*மாதாந்தம்.*—ரூபா 230—13 × 10 ; 6 × 15—450 (எல்லாமுமட்பட).

(*சேமலாபநிதி.*—15 சத வீதம் வேலைக்கு அமர்த்துபவர் 10 சத வீதம் உத்தியோகஸ்தர்).

**II. வேண்டிய தகைமைகள்.—**

(1) **வயது.**—1970 ம் ஆண்டு ஜூன் மாதம் 11 ந் திகதி அன்று 30 வயதுக்கு மேற்படாதவராக இருக்க வேண்டும்.

(2) **கல்வித் தகைமைகள்.**—(i) சிரேஸ்ட கல்வி தராதரப் பத்திரம் அல்லது கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சை (சா. த.) எண்கணிதம்/வர்த்தக கணிதம்/கணிதம் ஆகியவற்றில் ஒன்றில் திறமைச் சித்தியடைந்திருக்க வேண்டும் ; அத்துடன்

(ii) (அ) மேலே (i) ல் கொடுக்கப்பட்டுள்ள பரீட்சையில் ஒரே முறையில் 4 பாடங்களில் திறமைச் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அல்லது

(ஆ) உயர் கல்வித் தகைமைகள் பெற்றிருக்க வேண்டும்.

விண்ணப்பப் பத்திரங்களுக்கும் மேற்கொண்டு தேவைப்படும் முழு விபரங்களும் நேரிலோ அல்லது தபால் மூலமோ பின்வரும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். இலங்கை உர யாக்கம், (த. பெ. இல. 841), 746, காலி வீதி, கொழும்பு 4. தபால் மூலம் விபரங்கள் பெற விரும்புவோர் தமது முகவரி எழுதப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட கடித உறை ஒன்றினை அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பப் பத்திரங்கள் 1970 ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் 1970 ம் ஆண்டு ஜூன் மாதம் 10 ம் திகதி வரை விநியோகிக்கப்படும்.

**விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் முடிவு திகதி 1970 ஜூன் 11 ந் திகதியாகும்.**

*இலங்கை உர யாக்கத் தலைவர்.*

த. பெ. இல. 841,
கொழும்பு,
1970 ம் ஆண்டு எப்பிரில் மீ 25 ந் உ.

5–671—29.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,908

---

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

*எமது இலக்கம் இ1/70*

## இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பிற்கும் இலங்கை கடல் கடந்த சேவைக்கும் அனுமதிப்பதற்குப் போட்டிப் பரீட்சை 1970

*இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பிற்கும் இலங்கை கடல் கடந்த சேவைக்கும் அனுமதிப்பதற்குக் கொழும்பில் 1970 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள போட்டிப் பரீட்சைக்குரிய பின்வரும் பிரமாணங்கள் பொது அறிவிப்புக்காக வெளியிடப்படுகின்றன.*

*அரசாங்க சேவை ஆணைக்குழு அனுவலகம்,*
த. பெ. இல. 500,
கொழும்பு, 1970 ம் ஆண்டு மே மீ 8 ந் உ.

டி. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
*அரசாங்க சேவை ஆணைக்குழு.*

**பிரமாணங்கள்**

1. இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பிற்கும் இலங்கை கடல் கடந்த சேவைக்கும் அனுமதிப்பதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் யாவர்க்குமுரிய ஒரு போட்டிப் பரீட்சை நடாத்தப்படும். இப்பரீட்சை இரு பகுதிகளாக நடாத்தப்படும். கட்டாய பாடங்களைக் கொண்டுள்ள பரீட்சையின் " அ " பிரிவு, முதலில் 1970 ஓகத்து மாதத்திலோ அத் தேதியளவிலோ நடாத்தப்படும். உண்மையான தேதிகள் பின்னர் அறிவிக்கப்படும். " அ " பிரிவுப் பரீட்சை முடிவுகளைப் பெற்ற பின்னர் " ஆ ", " இ " பிரிவுப் பரீட்சைகள் நடாத்தப்படும். " ஆ ", " இ " பரீட்சைத் தேதிகள் பின்னர் அறிவிக்கப்படும். பொது நலன்கருதி இப்பரீட்சையை நிராகரித்தல் அவசியமென அரசாங்க சேவை ஆணைக்குழு கருதினால் அவ்வாறு செய்யும் உரிமையை ஆணைக்குழு தன்மாட்டுக் கொண்டுள்ளது. இப்பரீட்சையைத் தள்ளிப்போடல் அவசியமென அரசாங்க சேவை ஆணைக்குழு கருதினால் ஆணைக்குழு அவ்வாறு செய்யலாம்.

2. இப்பரீட்சை முடிவில் இலங்கை நிருவாகச் சேவையிலும் இலங்கை கடல் கடந்த சேவையிலும் நிரப்பப்படவுள்ள வெற்றுப் பதவிகளின் எண்ணிக்கையும் அத்தகைய வெற்றுப்பதவிகளை நிரப்பும் தேதியும் உரிய காலத்தில் அரசாங்கசேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும். அவ்வெற்றுப் பதவிகள் யாவற்றையுமோ அல்லது சிலவற்றையுமோ நிரப்பாது விடும் உரிமையையும் அல்லது வெற்றுப்பதவிகளின் எண்ணிக்கைக்கு மேலாக நிரப்பும் உரிமையையும் அரசாங்க சேவை ஆணைக்குழு தன்மாட்டுக் கொண்டுள்ளது.

3. இப்பரீட்சைக்குரிய பரீட்சார்த்திகள் இலங்கையராயிருத்தல் வேண்டும். இப் பரீட்சையின் பொருட்டு இலங்கையர் என்பவர் பரம்பரையாகவோ அல்லது பதிவு வழியாகவோ இலங்கைக் குடியாக இருத்தல் வேண்டும்.

4. இப் பரீட்சைக்குரிய பரீட்சார்த்திகள் 1970 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 1 ஆந் தேதியன்று 22 வயதையடைந்தவராகவும் 27 வயதையடையாதவராகவும் இருத்தல் வேண்டும் 1969. ஆம் ஆண்டு பரீட்சை நடாத்தப்படாமையால் இப்பரீட்சைக்கு மாத்திரம் வயதெல்லை மேலும் 27 ஆகக் கூட்டப்பட்டுள்ளது. அரசாங்க சேவையில் நிரந்தர நியமனம் வகிக்கும் உத்தியோகத்தர்களுக்கு மேற்கூறிய வயதெல்லை ஏற்புடையதாகாது.

5. விதிக்கப்பட்ட தகைமைகளையுடைய பெண் பரீட்சார்த்திகள் இப்பரீட்சையில் போட்டியிடும் உரிமையுடையவராவர். ஆனால் அவர்கள் நிரப்பப்படவுள்ள பதவிகளுள் 20 சத வீதத்துக்கு மேற்படாத பதவிகளை மட்டும் நிரப்பலாம் என்னும் நிபந்தனைக்குக் கட்டுப்பட்டவராவர்.

6. பரீட்சார்த்திகள் இப் பரீட்சை எழுதுவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவிடமிருந்து எழுத்து மூலம் நியமிப்புப் பெறவேண்டுமென வேண்டப்படுகின்றனர்.

7. பரீட்சார்த்திகள் உடல்நலமும் பண்பும் சம்பந்தமாகத் தாம் தகுதியுடையவரென அரசாங்க சேவை ஆணைக்குழுவைத் திருத்திப்படுத்தல் வேண்டும். அவர்கள் திடமான உடலமைப்பு உடையவராகவும் நல்ல கண் பார்வை உடையவராகவும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவை செய்வதற்கு உடல் நலத்தகுதிபெற்றவராகவும் இருத்தல் வேண்டும். இந்த விடயங்கள் சம்பந்தமாகச் சித்தியடையும் பரீட்சார்த்திகளைச் சோதிப்பதன் பொருட்டு அவர்கள் ஒரு மருத்துவப்பரீட்சைக்கு ஆளாதல் வேண்டும்.

8. மண முடித்த ஒரு பரீட்சார்த்தி அரசாங்க சேவை ஆணைக்குழுவின் விசேட சம்மதமின்றி நியமனத்திற்கு உரிமையுடையவராகார்.

9. இந்தப் பரீட்சைக்குரிய கட்டணம் பின்வருமாறு :—

(அ) பிரிவு அ—100 ரூபா. இக்கட்டணம் விண்ணப்பம் முடிவுறுந்தேதிக்கு முன்னராக அண்மையிலுள்ள கச்சேரியிலோ கொழும்புப் பொதுத்திறைசேரியிலோ செலுத்தப்பட்டு அரசிறைத் தலைப்பு VI உப தலைப்பு 3 இனம் (4) என்பதில் வரவு வைக்கப்படல் வேண்டும். கச்சேரியின் அல்லது திறைசேரியின் பற்றுச் சீட்டு விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) பிரிவு ஆ, இ—100 ரூபா. இப்பரீட்சையின் ஆ, இ பிரிவுகட்குத் தோற்றுவதற்குத் தகைமை பெறுவோர்க்கு இக் கட்டணம் செலுத்த வேண்டிய முறைபற்றிப் பின்னர் அறிவிக்கப்படும்.

**குறிப்பு :** இப்பரீட்சை எடுப்பதற்கு நியமிப்புப் பெறாத பரீட்சார்த்திகட்குக் குறித்த கட்டணம் திருப்பிக் கொடுக்கப்படும். ஒரு பரீட்சார்த்திக்கு நியமிப்பு அளித்த பின்னர் அவர் எக்காரணம் பற்றியும் பரீட்சையிலிருந்து விலகினால் அல்லது பரீட்சை எடுப்பதற்குத் தோற்றுவிடின் இக்கட்டணம் முழுவதையும் அல்லது பகுதியையேனும் திருப்பிப்பெறும் உரிமையுடையவராகார்.

(இ) மருத்துவப் பரீட்சைக்கு ரூபா 10.50 சதம்—இக்கட்டணம் செலுத்த வேண்டிய முறை சித்தியடையும் பரீட்சார்த்திகளுக்குப் பின்னர் அறிவிக்கப்படும்.

10. (அ) குறித்த போட்டிப் பரீட்சை எழுதுவதற்குரிய நியமிப்பானது அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தின் சிறப்பு அல்லது சாதாரண போட்டிப் பரீட்சையில் அல்லது இதனையொத்ததரமெனக் கருதப்படும் வேறு யாதாயினும் ஒரு பரீட்சையில் சித்தியடைந்துள்ள பரீட்சார்த்திகளுக்கு மட்டும் கட்டுப்படுத்தப்பட்டதாகும்.

(ஆ) வாய்மொழிப் பரீட்சையின்போது தமது வட்டச் சான்றிதழ்களை சமர்ப்பிக்குமாறு பரீட்சார்த்திகள் வேண்டப்படுவர்.

(இ) இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பிற்கும் இலங்கை கடல் கடந்த சேவைக்கும் அனுமதிக்கப்படுவதற்குரிய போட்டியில, தகைமைபெற்ற பரீட்சார்த்திகள் மட்டும் சேரலாம்.

இலங்கை நிர்வாகச் சேவை இலங்கை கடல் கடந்த சேவை ஆகியவற்றிற்கிடையில் தங்களது விருப்புரிமையை பரீட்சார்த்திகள் கூண்டு 18 இல் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படவேண்டிய இறுதித் திகதிக்குப் பின் குறிப்பிட்ட விருப்புரிமையில் மாற்றம் செய்ய அனுமதிக்கப்படமாட்டா.

11. **விண்ணப்பிக்கும் முறை**

(அ) விண்ணப்பப் படிவங்கள் 1970 ஆம் ஆண்டு யூன் 1 ஆந் திகதி தொடக்கம் யூன் 25 ஆந் திகதிவரை அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளரிடமிருந்து பெறப்படல் வேண்டும் ; **அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களுக்குரிய வேண்டுகோள்களுடன் 9″ × 4″க்குக் குறையாமல், முகவரியிடப்பட்டு முத்திரையிடப்படாத ஒரு உறையும் அனுப்பப்படல்வேண்டும். நேராகவந்து கேட்போருக்கு விண்ணப்பங்கள் கொடுக்கப்படமாட்டா.**

(ஆ) பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவதற்குரிய விண்ணப்பங்கள், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர், தபால் பெட்டி இல. 500, கொழும்பு என்னும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். அத்துடன் அது பதிவு அஞ்சலில் அன்னுரை 1970 ஆம் ஆண்டு யூன் மாதம் 29 ஆந் தேதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ சென்றடையுமாறு அனுப்பப்படுதல் வேண்டும். அத்தேதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம். அரசாங்க சேவையிலுள்ளவர்களின் விண்ணப்பங்கள் நிரு. பி. 109 இன்படி அவர்களின் திணைக்களத் தலைவர்க்கூடாக அனுப்பப்படுதல் வேண்டும்.

**(இ) விண்ணப்பங்கள் எல்லாவகையிலும் முற்றாக இருத்தல் வேண்டும். கேட்கப்படும் தகவல்கள் யாவற்றையும் கொண்டிராத எந்த விண்ணப்பமும் அதில் கொண்டுள்ள தகைமைகளைக் கொண்டமட்டும் தீர்மானிக்கப்படுவதுடன் நிராகரிக்கப்படுவதற்கும் ஏதுவாகும்.**

(ஈ) அத்தகைய விண்ணப்பம் அல்லது அது சம்பந்தமான கடிதம் எதுவும் அஞ்சலில் இழக்கப்பட்டுள்ளது அல்லது தாமதிக்கப்பட்டுள்ளது என்னுங் குற்றச்சாட்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கடைசி நாட்கள் வரை தமது விண்ணப்பங்களைத் தாமதிக்கும் பரீட்சார்த்திகள் தமது சொந்த ஆபத்தின் பேரில் அவ்வாறு செய்வர்.

**(உ) விண்ணப்பப்படிவங்களுடன் வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறிப்பிடப்பட்டுள்ள) அதில் குறிப்பிட்டுள்ளவாறு நிரப்பித் திருப்பியனுப்புமாறு பரீட்சார்த்திகள் வேண்டப்படுகின்றனர். அப்பொழுது இவ்வலுவலகத்தில் அவர்களுடைய விண்ணப்பம் பெற்றுக்கொள்ளப்பட்டமை ஒப்புக்கொள்ளப்படும். இத்தேவைக்கிணங்கி ஒழுகாத பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் ஒப்புக் கொள்ளப்படமாட்டா. இத்தேவைக்கிணங்கி ஒழுகியும் முடிவு தேதிக்கு பின்னர் மூன்று கிழமைக்குள் ஒப்புக்கொள்ளப் பெறாத பரீட்சார்த்திகள் அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு உடனேயே அறிவித்தல் வேண்டும். இவ்வேற்பாட்டிற்கிணங்க ஒழுகத் தவறும் விண்ணப்பக்காரரின் கோரிக்கை எதுவும் ஆராயப்படாது விடப்படலாம்.**

12. விண்ணப்பப்படிவம் பெறப்பட்டதும் பரீட்சைக்குரிய நியமிப்பு ஆராயப்படும்.

13. **எந்தப் பரீட்சார்த்தியும்** இரு தடவைக்கு மேலாக யாவர்க்குமுரிய போட்டிப் பரீட்சையெடுக்க உரிமையுடையவராகார்.

14. இப்பரீட்சை எழுதுவதற்கு நியமிப்புக்கள் அளிக்கப்பட்டுள்ள எல்லா பரீட்சார்த்திகளுக்கும் அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளர் அனுமதி அட்டைகளை வழங்குவார்.

**15. அடையாள அட்டைகள் பரீட்சார்த்திகள் தாம் எடுக்கும் ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் தமது அடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுவர். இதன் பொருட்டுப் பின்வரும் சாதனங்கள் யாதேனும் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**(அ) அஞ்சல் தலைமை அதிபதி வழங்கும் அடையாள அட்டைகள்.**

**(ஆ) இப்பரீட்சைத் தேதிக்கு மூன்று ஆண்டுக் காலத்துக்கு மேற்படாது வழங்கப்பட்டுள்ள செல்லுபடியான கடவுச் (பாஸ்போட்) சீட்டு.**

**(இ) அரசாங்கத் திணைக்களத்தின் அரசாங்கக் கூட்டுத்தாபனத்தின் அல்லது பிறிதோர் நியதிச் சட்டமுறையான நிறுவனத்தின் அதிகாரத்தின் பேரில், இப்பரீட்சைத் தேதிக்கு மூன்று ஆண்டுக்கு மேற்படாது வழங்கப்பட்டுள்ளதும் அதனை வைத்திருப்பவரின் நிழல் படத்தையும் கொண்டுள்ளதுமான ஒரு சான்றிதழ் உத்தரவுச் சீட்டு அல்லது பிறிதொரு சாதனம் எதுவும்.**

**16. பொய்யான தகவல்களைக் கொடுப்பவர்க்குத் தண்டம் இப்பரீட்சைப் பிரமாணங்களின்படி ஒரு பரீட்சார்த்தி தகுதியற்றவர் எனக் கண்டு பிடிக்கப்பட்டால், இப்பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின்போதோ அல்லது அதற்குப் பின்னரோ எக்கட்டத்திலும் அவரின் பரீட்சையுரிமை நிராகரிக்கப் படுவதற்கும் ஏதுவாகும்.**

**ஒரு பரீட்சார்த்தி அளிக்கும் விபரங்கள் எவையும் அவரின் அறிவுக்கு எட்டிய அளவில் பொய்யானவையெனக் காணப்படின் அல்லது அவர் எவ்வுண்மையையும் வேண்டுமென்றே மறைத்திருந்தால் அரசாங்க சேவையிலிருந்து அவர் விலக்கப்படுவதற்கு ஆளாவர்.**

17. அரசாங்க செய்திமடலிலிருந்து பகுதி I பிரிவு II இன் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவிகளின் நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்க.

**இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பிற்கும் இலங்கைக் கடல் கடந்த சேவைக்கும் அனுமதிப்பதற்குப் போட்டிப் பரீட்சை 1970**

**பரீட்சைத் திட்டம்**

**மொழி மூலம் :**—போட்டிப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

**(அ) கட்டாய பாடங்கள்.**—கட்டுரை சுருக்கியெழுதல், பொது அறிவு, பரீட்சார்த்திகள் இப்பாடங்களை எம் மொழி மூலம் எடுப்பர் என்பதைக் குறிப்பிடுதல் வேண்டும். பரீட்சார்த்திகள் கட்டாய பாடங்களை ஒரு மொழி மூலத்தில் மட்டும் எடுத்தல் வேண்டும். பரீட்சார்த்திகள் கட்டாய பாடங்களை எம் மொழி மூலத்தில் எடுக்கின்றனரோ அம்மொழியிலேயே அவர்கள் அரசாங்க சேவையில் சேருவதாகக் கருதப்படுவர்.

**(ஆ) விருப்புரிமைப் பாடங்கள் :**

(i) பரீட்சார்த்தி தேர்ந்தெடுக்கும் பாடம் அவரால் பட்டப் பரீட்சைக்கு எடுக்கப்பட்டதாயின் பட்டப் பரீட்சையில் அப்பாடத்தை எம்மொழியில் எழுதிச் சித்தியடைந்தாரோ அம் மொழியிலேயே எழுதுதல் வேண்டும் ;

(ii) பிற சந்தர்ப்பங்கள் யாவற்றிலும், ஒவ்வொரு பாடத்தையும் தான் எடுக்க விரும்பும் மொழி மூலத்தை விருப்புரிமை ஒழுங்கில் பரீட்சார்த்தி குறிப்பிடுதல் வேண்டும். இப் பாடங்களை எம்மொழியில் எடுக்க வேண்டுமென்பதை ஆணைக்குழு தற்றுணிபுப்படி தீர்மானிக்கும்.

பரீட்சையில் பின்வரும் பாடங்கள் சேர்க்கப்படும். ஒவ்வொரு பாடத்துக்கும் அதற்கெதிராகக் காட்டப்படும் புள்ளிகள் கொடுக்கப்படும்.

**பிரிவு அ**—எல்லாப் பரீட்சார்த்திகளும் கட்டாயமாக எடுத்தல் வேண்டும்

| | | புள்ளிகள் |
|---|---|---|
| 1. | கட்டுரை | 150 |
| 2. | சுருக்கியெழுதல் | 100 |
| 3. | பொது அறிவு | 150 |

**பிரிவு ஆ**—விருப்புரிமைப்பாடங்களும் வாய்மொழிப் பரீட்சையும் (பொது) விருப்புரிமைப் பாடங்கள்—இப்பிரிவில் மொத்தம் 600 புள்ளிகள் வரை பரீட்சார்த்தி பாடங்களை (4—63) எடுத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| 4. | சிங்களம் (கீழ்ப்பிரிவு) இருதாள்கள் | 200 |
| 5. | சிங்களம் (உயர்பிரிவு) நான்குதாள்கள் | 400 |
| 6. | தமிழ் (கீழ்ப்பிரிவு) இருதாள்கள் | 200 |
| 7. | தமிழ் (உயர்பிரிவு) நான்குதாள்கள் | 400 |
| 8. | அரபி (கீழ்ப்பிரிவு) இருதாள்கள் | 200 |
| 9. | அரபி (உயர்பிரிவு) நான்குதாள்கள் | 400 |
| 10. | சமஸ்கிருதம் (கீழ்ப்பிரிவு) இருதாள்கள | 200 |
| 11. | சமஸ்கிருதம் (உயர்பிரிவு) நானகுதாள்கள் | 400 |
| 12. | பாளி (கீழ்ப்பிரிவு) இருதாள்கள் | 200 |
| 13. | பாளி (உயர்பிரிவு) நான்குதாள்கள் | 400 |
| 14. | ஆங்கிலம் (கீழ்ப்பிரிவு) இருதாள்கள் | 200 |
| 15. | ஆங்கிலம் (உயர்பிரிவு) நான்குதாள்கள் | 400 |
| 16. | இலத்தீன் (கீழ்ப்பிரிவு) இருதாள்கள் | 200 |
| 17. | கிறீக் (கீழ்ப்பிரிவு) இருதாள்கள் | 200 |
| 18. | கிலாசிக் (உயர்பிரிவு) நான்குதாள்கள் | 400 |
| 19. | பிரான்சு (கீழ்ப்பிரிவு) இருதாள்கள் | 200 |
| 20. | வரலாறு (கீழ்ப்பிரிவு) இருதாள்கள் | 200 |
| 21. | வரலாறு (உயர்பிரிவு) நான்குதாள்கள் | 400 |
| 22. | பொருளியல் (கீழ்ப்பிரிவு) இருதாள்கள் | 200 |
| 23. | பொருளியல் (உயர்பிரிவு) நான்குதாள்கள் | 400 |
| 24. | அரசியல் (கீழ்ப்பிரிவு) இருதாள்கள் | 200 |
| 25. | அரசியல் (உயர்பிரிவு) நான்குதாள்கள் | 400 |
| 26. | சமூகவியல் (கீழ்ப்பிரிவு) இருதாள்கள் | 200 |
| 27. | சமூகவியல் (உயர்பிரிவு) நான்குதாள்கள் | 400 |
| 28. | பூகோளவியல் (கீழ்ப்பிரிவு) இருதாள்கள் | 200 |
| 29. | பூகோளவியல் (உயர்பிரிவு) நான்குதாள்கள் | 400 |
| 30. | புதைபொருளியல் (கீழ்ப்பிரிவு) இருதாள்கள் | 200 |
| 31. | புதைபொருளியல் (உயர்பிரிவு) நான்குதாள்கள் | 400 |
| 32. | மனிதரியல் (கீழ்ப்பிரிவு) இருதாள்கள் | 200 |
| 33. | பௌத்தநாகரிகம் (கீழ்ப்பிரிவு) இருதாள்கள் | 200 |
| 34. | பௌத்தநாகரிகம் (உயர்பிரிவு) நான்குதாள்கள் | 400 |
| 35. | மெஞ்ஞானவியல் (கீழ்ப்பிரிவு) இருதாள்கள் | 200 |
| 36. | மெஞ்ஞானவியல் (உயர்பிரிவு) நான்குதாள்கள் | 400 |
| 37. | தூயகணிதம் (கீழ்ப்பிரிவு) இருதாள்கள் | 200 |
| 38. | பிரயோககணிதம் (கீழ்ப்பிரிவு) இருதாள்கள் | 200 |
| 39. | கணிதம் (உயர்பிரிவு) நான்குதாள்கள் | 400 |
| 40. | பௌதிகவியல் (கீழ்ப்பிரிவு) இருதாள்கள் | 200 |
| 41. | பௌதிகவியல் (உயர்பிரிவு) நான்குதாள்கள் | 400 |
| 42. | இரசாயனவியல் (கீழ்ப்பிரிவு) இருதாள்கள் | 200 |
| 43. | இரசாயனவியல் (உயர்பிரிவு) நான்குதாள்கள் | 400 |
| 44. | தாவரவியல் (கீழ்ப்பிரிவு) இருதாள்கள் | 200 |
| 45. | தாவரவியல் (உயர்பிரிவு) நான்குதாள்கள் | 400 |
| 46. | விலங்கியல் (கீழ்ப்பிரிவு) இருதாள்கள் | 200 |
| 47. | விலங்கியல் (உயர்பிரிவு) நான்குதாள்கள் | 400 |
| 48. | அரசாங்க நிருவாகம் (ஒருதாள்) | 100 |
| 49. | அரசாங்க நிதி (ஒருதாள்) | 100 |
| 50. | அலுவல நிருவாகம் (ஒருதாள்) | 100 |
| 51. | முகாமைத் தத்துவங்கள் (ஒருதாள்) | 100 |
| 52. | சந்தைப்படுத்தல் (ஒருதாள்) | 100 |
| 53. | கல்வி சார்ந்த உளவியல் (ஒருதாள்) | 100 |
| 54. | கல்வித் தத்துவங்கள் (ஒருதாள்) | 100 |
| 55. | ஒப்பியல் கல்வி (ஒருதாள்) | 100 |
| 56. | ஆட்கள் உடமைச் சட்டம் (ஒருதாள்) | 100 |
| 57. | கட்டுப்பாடுகள் சட்டம் (ஒருதாள்) | 100 |
| 58. | உரோமன் சட்டம் (ஒருதாள்) | 100 |
| 59. | அரசியலமைப்புச் சட்டம் (ஒருதாள்) | 100 |
| 60. | சர்வதேசச் சட்டம் (ஒருதாள்) | 100 |
| 61. | நீதிவன்மையும் சட்டக்கொள்கையும் (ஒருதாள்) | 100 |
| 62. | கிறிமினல் சட்டம் (ஒருதாள்) | 100 |
| 63. | வாய்மொழிப் பரீட்சை (பொது) | 100 |

பிரிவு இ—இலங்கை நிருவாகச் சேவைப் பரீட்சார்த்திகளுக்குக் கட்டாயமானது.

64. உலக அலுவல்கள் (ஒருதாள்).
65. வாய்மொழிப் பரீட்சை (விசேடம்).

குறிப்பு (i)—இயற்கை விஞ்ஞானப் பாடங்களை எடுக்கும் பரீட்சார்த்திகள் (பாடம் 34 முதல் 41 உட்பட) பல்கலைக்கழகத் தரத்திலுள்ள ஒரு கழகத்திலிருந்து ஆய்கூடப் பயிற்சிச் சான்றிதழ் சமர்ப்பித்தல் வேண்டும். கழகத் தலைவர் சான்றிதழில் கையொப்பமிடல் வேண்டும்.

குறிப்பு (ii)—பூகோளவியல் பாடமெடுக்கும் பரீட்சார்த்திகள் பல்கலைக்கழகத் தரமுள்ள ஒரு கழகத்தில் அப்பாடத்தில் செயல் முறைப்பயிற்சி செய்துள்ளதாக ஒரு சான்றிதழ் சமர்ப்பித்தல் வேண்டும்.

குறிப்பு (iii)—ஒவ்வொரு பாடத்திற்குமென பரீட்சார்த்திகளுக்கு ஒதுக்கியுள்ள புள்ளிகளிலிருந்து வெறும் மேலீடான அறிவுக்குத் திறமை பாராட்டாதவாறு பரிசோதகர்கள் அவசியமெனக் கருதும் அத்தகைய புள்ளிகள் கழிக்கப்படும்.

குறிப்பு (iv)—ஒரு பரீட்சார்த்தியின் எழுத்து தெளிவாகவில்லையாயின் அவருக்குச் சேரும் மொத்தப் புள்ளியிலிருந்து இதன் பொருட்டுப் பல புள்ளிகள் கழிக்கப்படும்.

குறிப்பு (v)—சொல்லமைதியுடன் ஒழுங்காகப் பயன்படுமுறையில் திட்பமாக அமையுங் கூற்றுகளுக்கு, மொழிக்கென விசேடமாகவுள்ள 1 ஆம் பாடம் மட்டுமின்றிப் பரீட்சைப் பாடங்கள் யாவற்றிற்கும் திறமை காட்டப்படும்.

குறிப்பு (vi)—வாய்மொழிப் பரீட்சை நடாத்தப்படும் சபைக்கு எழுத்துப் பரீட்சையில் பரீட்சார்த்திகள் பெற்றுள்ள புள்ளிகள் கொடுக்கப்பட மாட்டாது.

இப்பரீட்சை இரு பகுதிகளாக நடாத்தப்படும். கட்டாய பாடங்களாகிய வியாசம், சுருக்கியெழுதல், பொது அறிவு ஆகியவற்றைக் கொண்டுள்ள " அ " பிரிவுப் பரீட்சை முதலில் நடாத்தப்படும். " அ " பிரிவுப் பரீட்சை முடிவில் " ஆ " பிரிவுப் பரீட்சையெடுக்க அனுமதிக்கப்படும் அபேட்சகர்களின் எண்ணிக்கை இலங்கை நிருவாகச் சேவையில் அப்பொழுதுள்ள வெற்றுப்பதவிகளின் எண்ணிக்கையின் மூன்று மடங்காகும்.

இப்பரீட்சையின் " ஆ " பிரிவு 600 புள்ளிகளைக் கொண்டுள்ள விருப்புரிமைப் பாடங்களையும் 200 புள்ளிகளைக் கொண்டுள்ள வாய்மொழிப் பரீட்சையும் (பொது) உடையதாயிருக்கும். இலங்கை கடல்கடந்து சேவைக்குப் புகும் அபேட்சகர்கள் விருப்புரிமைப் பாடங்களோடும் வாய்மொழிப் பரீட்சையோடும் (பொது) 100 புள்ளிகளைக் கொண்டுள்ள உலக அலுவல்கள் தாளையும் எடுக்குமாறு வேண்டப்படுவர். உலக அலுவல்கள் தாளில் போதுமான உயர்தரத்தையடையும் அபேட்சகர்கள் வாய்மொழிப் பரீட்சைக்கு (சிறப்பு) அழைக்கப்படுவர். இந்த உயர்தரம் அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் தீர்மானிக்கப்படும்.

இலங்கை நிருவாகச் சேவையில் நியமிப்பதற்குத் தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களின் இறுதித் திறன்வரிசை, அபேட்சகர்கள் " அ ", " ஆ " ஆகிய இரு பிரிவுகளிலும் பெற்ற புள்ளிகளை ஆராய்ந்த பின்னரும் இலங்கை கடல் கடந்த சேவைக்கு நியமிப்பதற்கு தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களின் இறுதித் திறன் வரிசை அவர்கள் " அ ", " ஆ ", " இ " ஆகிய பிரிவுகளில் எடுத்த புள்ளிகளை ஆராய்ந்த பின்னரும் தீர்மானிக்கப்படும்.

### பாடவிதானம்

பிறவாறு குறிக்கப்பட்டிருந்தாலொழிய எல்லாத் தாள்களுக்கும் மூன்று மணித்தியாலங்கள் கொடுக்கப்படும்.

### பிரிவு அ

### எல்லாப் பரீட்சார்த்திகட்கும் கட்டாயமானது

1. **கட்டுரை.**—குறிப்பிட்ட 4 அல்லது 5 விடயங்களுள் ஒன்றில் ஒரு கட்டுரை எழுதுதல் வேண்டும். இவ்விடயங்கள் விசேடமாக எந்தக் கல்வித் துறையையும் சார்ந்திராது. ஆனால் பரீட்சார்த்தியின் அறிவையும் விவேகத்தையும் சோதிப்பதற்கும் கற்பனாசக்தியையும் எடுத்துரைக்கும் ஆற்றலையும் சோதிப்பதற்குமாக அமைந்திருக்கும். கட்டுரையானது கருத்தின் ஆழத்தையும் அவ்விடயம் பற்றிய புதிய முறைகளைக் கையாளுந் திறனையுங் கொண்டு சீர்தூக்கி ஆராயப்படுவதுடன் அதன் மொழி, நடை, ஒழுங்கு படுத்தல் முதலியனவும் ஆராயப்படும். அது தெளிவாகவும் விளக்கமாகவும் எழுதப்படுதல் வேண்டும்.

**குறிப்பு.**—(அ) பொருத்தமுடைமை ;

(ஆ) தெளிவுடைமை ஆகியவற்றின் முக்கியத்துவத்தைப் பரீட்சார்த்திகள் அறிந்திருத்தல் வேண்டும். பரீட்சார்த்திகள் எழுதத் தொடங்குமுன்னர் அவ்விடயம் பற்றி நன்கு சிந்தித்து அதனை உணர வேண்டுமென அறிவுரை கூறப்படுகின்றனர். அவ்விடயத்தை நன்கு ஆராய்ந்தமைக்கும் ஒழுங்கான கருத்துக்களுக்கும் எழுத்தின் தன்மைக்கும் விசேட திறமை கொடுக்கப்படும்.

2. **சுருக்கி எழுதுதல்.**—உரைநடைப் பகுதியொன்றையோ அல்லது அதற்கு மேற்பட்டவற்றையோ மிக நுட்பமாகச் சுருக்கி எழுதும் பரீட்சார்த்தியின் ஆற்றலைச் சோதிப்பதற்காக ஒரு மணித்தியால வினாத்தாள் கொடுக்கப்படும்.

3. **பொது அறிவு.**—தற்காலத்தில் முதன்மை வாய்ந்ததும் மிக நயப்பானதுமான விடயங்களில்—பண்பாடு, இலக்கியம், பொருளாதாரம். அரசியல், விஞ்ஞானம்—ஒரு வினாத்தாள். தெரிந்தெடுப்பதற்கு இலகுவாகப் பல வினாக்கள் இவற்றில் கொடுக்கப்படும்.

### பிரிவு ஆ

### விருப்புரிமைப் பாடங்கள், வாய்மொழிப் பரீட்சை (பொது)

4. **சிங்களம் (கீழ்ப் பிரிவு) இரு தாள்கள்.**—உரைநடையிலுள்ள விவரண, நிகண்டு நூல்களும் செய்யுள் காவியங்களும் தவிர்த்து 12 ஆம் நூற்றாண்டு முதல் இற்றைவரையிலுள்ள சிங்கள நூல்கள்.

மேற்கூறிய நூல்களிலிருந்து எடுக்கப்படும் பகுதிகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கவோ அல்லது உரைநடையில் எழுதவோ பரீட்சார்த்திகள் எதிர்பார்க்கப்படுவர். அதன் மொழியும் விடயம் பற்றியும் வினாக்கள் கொடுக்கப்படும்.

12 ஆம் நூற்றாண்டு முதல் இன்று வரையுள்ள சிங்கள இலக்கியத்தின் வரலாற்றுச் சுருக்கம். உரைநடையில் கட்டுரை.

5. **சிங்களம் (உயர் பிரிவு) நான்கு தாள்கள்.**—சிங்களக் கல்வெட்டுக்கள், காப்பிய இலக்கியங்கள், உரைநடையும் செய்யுளும்.

மேற்கூறிய நூல்களிலிருந்து எடுக்கப்படும் பகுதிகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கவோ அல்லது உரைநடையில் எழுதவோ பரீட்சார்த்திகள் எதிர்பார்க்கப்படுவர். அதன் மொழியும் விடயம் பற்றியும் வினாக்கள் கொடுக்கப்படும்.

ஒரு கட்டுரை, ஆங்கிலத்திலும் சிங்களத்திலிருந்து ஆங்கிலத்திற்கும் மொழிபெயர்த்தல். இலக்கியத் திறனாய்வு.

முற்காலம் தொடக்கம் தற்காலம் வரை சிங்கள இலக்கிய வரலாறு. சிங்கள மொழியின் வரலாறு.

சமயத்தினதும் கலைகளினதும் அபிவிருத்தியை விசேடமாகக் குறிப்பிட்டுச் சிங்களப் பண்பாடும் நாகரீகமும் (ஓவியம், சிற்பம், கட்டிடக் கலை)

6. **தமிழ் (கீழ்ப் பிரிவு) இரு தாள்கள்.**—இடைக்கால தற்கால நூல்களிலிருந்து மொழிபெயர்ப்பும் அவற்றின் மொழியிலும் விடயத்திலும் கேள்விகள்.

மிக முந்திய காலந்தொட்டு தமிழ் இலக்கிய வரலாறு ; உரைநடையில் கட்டுரை.

7. **தமிழ் (உயர் பிரிவு) நான்கு தாள்கள்.**—தமிழ்க் கல்வெட்டுக்களிலிருந்தும் மிக முந்திய தமிழ் நூல்களிலிருந்தும் மொழிபெயர்ப்புக்கள், இலக்கியத் திறனாய்வு, தமிழ் மொழி வரலாறு, யாப்பு, செய்யுளியல்.

தமிழரை விசேடமாகக் குறிப்பிட்டு மிகப் பழைய காலத்திலிருந்து 19 ஆம் நூற்றாண்டு வரையுள்ள திராவிட நாகரிகத்தின் வரலாறு.

மிகப் புதுமையான கருத்துக்களைக் கூறுவோர் பற்றிய அறிவுக்குச் சிறப்புத் திறமை காட்டப்படும்

8. **அரபு (கீழ்ப் பிரிவு) இரு தாள்கள்.**—இவ் விடயத்திலும் இலக்கணத்திலும் கேள்விகள் உட்பட, இஸ்லாமுக்குப் பிந்திய நூல்களிலிருந்தும் தற்கால அரபு நூல்களிலிருந்தும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தல்.

அரபு மொழியில் உரைநடைக் கட்டுரை. அரபு இலக்கிய வரலாறு.

9. **அரபு (உயர் பிரிவு) நான்கு தாள்கள்.**—7 முவல்லகாட் உட்பட இஸ்லாமுக்குப் பிற்பட்ட இடைக்கால நூல்களிலிருந்து மொழிபெயர்ப்பும் இலக்கண வடிவங்களில் கேள்விகளும்.

அரபு இலக்கிய வரலாற்றின் குறிப்பிட்ட பல விடயங்களுள் ஒன்றில் அரபு மொழியில் கட்டுரை. செய்யுள் இயலிலும் ஓசை பிரித்தலிலும் இஸ்லாமிய நாகரீகத்திலும் கேள்விகள்.

இஸ்லாமுக்கு முற்பட்ட அரேபியா பற்றிய கருத்துக்களையும் புராணக் கருத்துக்களையும் விசேடமாகக் குறிப்பிட்டு செமிற்றிக் சமயங்களின் வரலாறு. மிகப் புதுமையான கருத்துக்களைக் கூறுவோர் பற்றிய அறிவுக்குச் சிறப்புத் திறமை காட்டப்படும்.

10. **சமஸ்கிருதம் (கீழ்ப் பிரிவு) இரு தாள்கள்.**—காப்பியங்கள் உட்பட எளிதான வேத நூல்களிலிருந்தும் செம்மொழி இலக்கியங்களிலிருந்தும் மொழிபெயர்ப்புக்கள், அவற்றின் மொழியிலும் விடயங்களிலும் கேள்விகள்.

சமஸ்கிருத இலக்கிய வரலாறு, யாப்பு, செய்யுளியல், தேவனாகிரி எழுத்தில் உரைநடைக் கட்டுரை.

11. **சமஸ்கிருதம் (உயர் பிரிவு) நான்கு தாள்கள்.**—மெஞ்ஞானவியல், தொழில் நுட்பவியல், இலக்கியம் உட்பட உயர் பாடத்தில் வேத நூல்களிலிருந்தும் செம்மொழி இலக்கிய நூல்களிலிருந்தும் மொழிபெயர்த்தல், அவற்றின் மொழியிலும் விடயத்திலும் வினாக்கள்.

குறிப்பிடப்பட்ட பல விடயங்களில் ஒரு கட்டுரை. கடுமையான ஒரு பகுதியை சமஸ்கிருதத்தில் மொழிபெயர்த்தல், அல்லது அதற்குப் பதிலாகச் செய்யுள் இயற்றல், தேவனாகிரி எழுத்திலிருத்தல் வேண்டும்.

வேத நூல், மெஞ்ஞானவியல், தொழில் நுட்ப இலக்கியம் ஆகியவற்றின் வரலாறும், வேத காலத்தின் தொன்மையும் புதைபொருள் கண்டுபிடிப்புக்கள் பற்றிய அறிவும் தேவைப்படும்.

ஆதிகாலம் முதல் கி. பி. 1800 ஆம் ஆண்டுகள் வரை இந்திய சமயம், புராணங்கள், மெஞ்ஞானவியல், இந்தியா பற்றிய சிந்தனைகள் ஆகியவற்றின் வரலாறு மிகப் புதுமையான கருத்துக்கள் பற்றிய அறிவுக்குத் திறமை காட்டப்படும்.

12. **பாளி (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள்.**—பாகரண இலக்கியந் தவிர்த்துப் பிடக நூல்களிலிருந்தும் பிடக இலக்கியத்திற்குப் பிற்பட்ட நூல்களிலிருந்தும் மொழிபெயர்த்தல், அவற்றின் மொழியிலும் விடயத்திலும் கேள்விகள்.

**உரைநடைக் கட்டுரை**

இலங்கையின் பாளி இலக்கிய வரலாறும், இலங்கையின் பௌத்த சமய வரலாறும்.

13. **பாளி (உயர் பிரிவு) நான்கு தாள்கள்.**—அபிதம்ம நூலும் பாகரண இலக்கியமும் உட்பட கடுமையான பிடக நூல்களிலிருந்தும் மொழிபெயர்த்தல். அவற்றின் மொழி, விடயம், இலக்கணம், மொழியியல் ஆகியவற்றில் கேள்விகள்.

பௌத்த கட்டுப்பாடும் அக்காலத்து இந்திய மெஞ்ஞானவியல் தொடர்பான அறிவும் பரீட்சார்த்திகளிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது.

குறிப்பிடப்பட்ட பல விடயங்களுள் ஒன்றில் ஒரு கட்டுரை அல்லது அதற்குப் பதிலாகப் பாளி செய்யுளில் மொழிபெயர்ப்பு அல்லது வேறு இலக்கிய நூலை உரைநடையில் மொழிபெயர்த்தல்.

பாளி இலக்கியத்தினது வரலாறும் அதன் தொன்மையும்.

பௌத்த கோட்பாட்டின் வரலாறு, மகாயன பௌத்த அறிவு தேவைப்படும்.

புதுமையான கருத்துக்கள் பற்றிய அறிவுக்குத் திறமை காட்டப்படும்.

14. **ஆங்கிலம் (கீழ்ப் பிரிவு) இரு தாள்கள்.**— கீழ்க் கூறப்படும் **நால்வரைச்** சிறப்பாகக் குறிப்பிட்டு 1600–1732 வரை ஆங்கில இலக்கியம். சேக்ஸ்பியர், திறைடன், டொக்டர் ஜோன்சன், ஜெயின் ஒல்காட், வேட்ஸ்வெத், கீற்ஸ்.

பின் கூறப்படுபவர்களுள் **நால்வரைச்** சிறப்பாகக் குறிப்பிட்டு 1832 முதல் தற்காலம் வரை ஆங்கில இலக்கியம்.

ஆணல், ரெனிசன், ஷோ, கொன்ட்ராட், டி. எச். லோறன்ஸ், ரி. எஸ். இலியட்.

விசேடமாகக் கற்பதற்கெனத் தேர்ந்தெடுக்கப்படும் எழுத்தாளர்களின் எல்லா நூல்களையும் விரிவாக அறிந்திருக்குமாறும் அல்லது அவர்களின் நூல்களிலிருந்து பிரித்தெடுக்கப்படும் பகுதிகளை அறிந்திருக்குமாறும் பரீட்சார்த்திகள் எதிர்பார்க்கப்பட மாட்டார். உதாரணமாக—சேக்ஸ்பியர் என்றால் இன்பவியல் நாடகமான " ஆஸ் யூ லைக்கிற் ", துன்பவியல் நாடகமான " கிங்லியர் ", பிற்கால நாடகமான " ரெம்பஸ்ட் " போன்றவற்றைக் கற்று அவை போன்ற பிறவற்றையும் அறிந்திருத்தல் வேண்டுமெனக் கருதப்படும்.

விசேடமாகக் கற்பதற்கென எதிர்பார்க்கப்பட்டுள்ள எழுத்தாளர்களின் நூல்களிலுள்ள விடயங்களை விளக்கும் பொழுது அவ்வாசிரியர்களின் பெரு நூல்களிலிருந்து அவை எடுக்கப்படல் வேண்டும். கீழ்ப் பிரிவுக்குத் தரப்பட்டுள்ள இரு பெரும் பகுதியான காலத்திற்குரிய இலக்கிய அபிவிருத்தி பற்றிய அறிவு பரீட்சார்த்திகளுக்குத் தேவைப்படாது. எனினும், அவர்கள் மொழியை நன்கு கற்றுள்ளார் எனத் தமது விடைகள் மூலம் காட்டுமாறு எதிர்பார்க்கப்படுவர்.

15. **ஆங்கிலம் (உயர் பிரிவு) நான்கு தாள்கள்.**—பின்வருவோரை விசேடமாகக் கற்று 1550–1660 வரையுள்ள ஆங்கில இலக்கியம்.

ஜோசர், ஸ்பென்ஸர், சேக்ஸ்பியர், பென்ஜோன்ஸர், டொன், மில்ரன், வில்ஸ்ரர்.

பின்வருவோரை விசேடமாகக் கற்று 1660–1798 வரையுள்ள ஆங்கில இலக்கியம்.

பிறைடன், கோப், சுவிப்ற், அடிசன், டொக்டர் ஜோன்சன், பீஸ்டின், பேர்க்.

பின்வருவோரை விசேடமாகக் கற்று 1798–1880 வரையுள்ள ஆங்கில இலக்கியம்.

வேட்ஸ் வேத், கீற்ஸ், ஷெலி, ஜேன் ஒஸ்ரின், ரெனிசன், ஆணல் டிக்கன்ஸ்.

பின்வருவோரை விசேடமாகக் கற்று 1880 முதல் தற்காலம் வரையுமுள்ள ஆங்கில இலக்கியம்.

கொப்கின்ஸ், ஷோ, கொன்ராட், ஜொயிஸ், டி. எச். லோரன்ஸ், ஈ. எம். வேஸ்ரர், ரி. எஸ். இலியட்.

மேற்கூறிய தொகுதிகள் ஒவ்வொன்றிலும் விசேட கல்விக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் குறைந்தது நால்வரைப் பற்றிய அறிவைப் பரீட்சார்த்திகளிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. அத்தகைய எழுத்தாளர் ஒவ்வொருவரின் நூலிலிருந்தும் எடுக்கப்படும் பகுதியை அறிந்து திறனாய்வு செய்யும் வல்லமையைச் சோதிப்பதற்கு உள்ள கட்டாயமான வினாவுக்கு விடை கூறுமாறும் எதிர்பார்க்கப்படுவர். (மற்றக் கேள்விகளிலும் இதற்கு விசேட திறமை கொடுக்கப்படும்) விசேடமாகக் கற்பதற்கெனவுள்ள ஒவ்வொரு காலத்தின் பிரதான இலக்கியப் போக்கை எடுத்துக் காட்டும் ஒரு பகுதியைத் திறனாய்வு செய்வதற்கு ஒரு கேள்வி இருக்கும். அத்தகைய காலத்தின் சமூக இலக்கியச் சூழ்நிலை பற்றிய அறிவும் தேவையெனக்கருதப்படும். இப்பாடத்தை எடுக்கும் பரீட்சார்த்திகள் ஆங்கில மொழியில் தமக்குள்ள வல்லமையையும் அதன் பிரதான இலக்கியத்தை வாசித்துள்ளமையும் பரீட்சார்த்தியிடமிருந்து எதிர்பார்க்கப்படும்.

16. **இலத்தீன் (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள். இலத்தீன்** நூல்களிலிருந்து முன்னர் ஆயத்தஞ் செய்யப்படாத மொழி பெயர்ப்பு—அவற்றின் மொழியிலும் விடயத்திலும் கேள்விகள் ;

உரைநடைக் கட்டுரையும் இலத்தீன் இலக்கிய வரலாறும்.

17. **கிறீக் (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள்.**—கிறீக் நூல்களிலிருந்து முன்னர் ஆயத்தஞ் செய்யப்படாத மொழிபெயர்ப்பு. அவற்றின் மொழியிலும் பாடயத்திலும் கேள்விகள்.

உரைநடைக் கட்டுரையும் கிறீக் இலக்கிய வரலாறும்.

18. **செம் மொழி இலக்கியங்கள் (உயர் பிரிவு) நான்கு தாள்கள்.**—உயர்ந்த கட்டத்திலுள்ள கிறீக் நூல்களிலிருந்து முன்னம் ஆயத்தஞ் செய்யப்படாத மொழி பெயர்ப்பும் கிறீக் மொழியில் உரைநடை அல்லது செய்யுள் கட்டுரையும் (ஒருதாள்) உயர் கட்டத்தில் இலத்தீன் நூல்களிலிருந்து முன்னர் ஆயத்தஞ் செய்யப்படாத மொழி பெயர்ப்பும் உரைநடையில் அல்லது செய்யுளில் அல்லது இவ்விரண்டிலும் இலத்தீன் கட்டுரைகளும் (ஒரு தாள்).

கிறீக் நாகரீகத்தினும் உரோமன் நாகரீகத்தினதும் வரலாறு, இலக்கியம், புவியியல், சமூகவியல், அரசியல், சமயம், விஞ்ஞான அபிவிருத்திகள், (இரு தாள்கள்).

உரோமன் வரலாறு கி. மு. 132 முதல் கி. மு. 143 வரையுள்ள காலம் பிரதானமானதாகும். இலத்தீன் இலக்கியத்தில் சிசரோனிய காலமும் ஒகஸ்ரின் காலமும் பிரதானமானதாகும். கிறீக் வரலாறு கி. மு. 519 முதல் கி. மு. 430 வரையுள்ள காலம் பிரதானமாகும். கிறீக் இலக்கியத்தில் அட்ரிக் நாடகாசிரியர்களும் எழுத்தாசிரியர்களும் முக்கியமானவர்களாகும்.

புதுமையான கருத்துக்களுக்குச் சிறப்புத்திறன் கொடுக்கப்படும்.

19. **பிரெஞ்சு (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள்.**—தாள் 1—17 ஆம் நூற்றாண்டு முதல் 20 ஆம் நூற்றாண்டு வரையுள்ள பிரான்ஸ் இலக்கியத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளை முன் ஆயத்தஞ் செய்யாது மொழி பெயர்த்தல் ; உரைநடைக் கட்டுரை.

**தாள் II** பின்வரும் எழுத்தாளர்களுள் **நால்வரை** விசேடமாகக் குறிப்பிட்டு 17 ஆம் நூற்றாண்டு முதல் 20 ஆம் நூற்றாண்டு வரையுள்ள பிரஞ்சு இலக்கியம் :

மோலியர், ரசீன், ரூசோ, கியூகோ, புளோபேட், போடிலயர், ஹைட், சிரோடோ.

விசேடமாகக் கற்பதற்கெனத் தற்போதுள்ள ஆசிரியர்கள் பற்றிய கேள்விகளுக்குரிய விடைகள், அவர்களின் பிரதான நூல்கள் பற்றிய வரலாற்றின் அறிவைக் காட்டுதல் வேண்டும். பிற பெரிய நூல்களிலிருந்தும் மிகப் பொதுவான தன்மையுள்ள வினாக்களைத் தெரிந்தெடுக்கும் வாய்ப்புக்களை பரீட்சார்த்திகள் பெறுவர்.

ஒரு கேள்விக்குப் பிரெஞ்சு மொழியில் விடை எழுதல் வேண்டும்.

20. **வரலாறு (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள்.**—நான்கு தாள்களில் பரீட்சார்த்திகள் இரண்டுக்கு மேற்படாமலோ குறையாமலோ அவற்றுக்கு விடை எழுதுதல் வேண்டும்.

**தாள் I**—கி. பி. 320 வரை இந்திய வரலாறு.
**தாள் II**—இலங்கை வரலாறு.
**தாள் III**—1780 முதல் ஐரோப்பிய வரலாறு.
**தாள் IV**—இந்தியக் குடாநாட்டு வரலாறு ; **அல்லது 1707–1947** வரை இந்திய வரலாறு.

21. **வரலாறு (உயர்பிரிவு) நான்கு தாள்கள்.**—எட்டுத்தாள்களுள் பரீட்சார்த்திகள் நான்கு தாள்களுக்கு விடை எழுதுதல் வேண்டும்.

**தாள் 1**—320–1050 வரை இந்திய வரலாறு.
**தாள் 2**—1050–1526 வரை இந்திய வரலாறு.
**தாள் 3**—இந்திய அரசியலும் சமூகவியல் கொள்கைகளும் நிறுவனங்களும்.
**தாள் 4**—இந்தியாவுக்கு வெளியே இந்தியக் குடியேற்ற முயற்சிகளும் பண்பாட்டு முயற்சிகளும்
**தாள் 5**—1760 முதல் பிரித்தானிய வரலாறு.
**தாள் 6**—பிரித்தனிய குடியேற்ற வரலாறு.
**தாள் 7**—ஐரோப்பிய அரசியற் கொள்கை வரலாறு.
**தாள் 8**—1796 முதல் இலங்கை வரலாறு.

22. **பொருளியல் (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள்.**—வரையறை, நோக்கம், முறை உட்படப் பொருளியல் தத்துவங்கள், பொருளியல் முறைகள், உற்பத்திக் கொள்கை, பயன்தரும் முயற்சிகளின் வகை, சந்தை முறை, விலை நிர்ணயித்தல், தனியுரிமையும் போட்டியும் பற்றிய விளைவுகள், அதன் பருமனைத் தீர்மானிக்கும் தேசிய வருவாய்ச் சக்திகள், சேமிப்பு, முதலீடு ஆகியவற்றின் கடமை, தேசிய வருமானத்தைப் பகிரல், பொருளாதார வாழ்க்கையில் அரசின் பங்கு, பொது நிதி.

பணத்தின் தன்மையும் வரையறையுமுட்பட்ட வங்கித் தொழிலும் நாணயமும், விலைமாற்றுக் கொள்கைகள், நாணய முறை, வங்கியின் தொழில், மத்திய வங்கித் தொழில், நாணயத் தாபனத்தினதும் கொள்கையினதும் சிக்கல்கள், சர்வதேச பொருளாதாரக் கொடுக்கல் வாங்கல், செல்மதி நிலுவை, நாணயமாற்று வீதங்கள்.

19 ஆம் 20 ஆம் நூற்றாண்டுகளின் இங்கிலாந்து, பிரான்சு, சேர்மனி, உருசியா, அ. ஐ. அரசுகளின் பொருளியல் வரலாறு உட்படத் தற்கால பொருளியல் வரலாறு.

23. **பொருளியல் (உயர்பிரிவு) நான்கு தாள்கள்.**—பத்துத் தாள்களுள் முதல் இரண்டு வினாத்தாள்களுக்கும், மற்றைய எட்டு வினாத்தாள்களுள் இரண்டிற்கும் பரீட்சார்த்திகள் விடை எழுதுதல் வேண்டும்.

**தாள் 1**—கீழ்ப்பிரிவிலுள்ளதிலும் உயர்ந்த கட்டத்தில் பொருளியல் தத்துவங்கள்.

**தாள் 2**—இலங்கையிலும் உலகத்திலுமுள்ள தற்காலப் பொருளாதாரச் சிக்கல்கள் பற்றிய பரீட்சார்த்தியின் அறிவையும் விளக்கத்தையும் சோதிப்பதற்காகத் தற்காலப் பொருளாதாரப் பிரச்சினைகளில் ஒரு வினாத்தாள். தற்காலப் பொருளாதாரச் சஞ்சிகைகளையும் சாதனங்களையும் பற்றி சித்திருத்தல் வேண்டும்.

**தாள் 3, தாள் 4**—உயர்ந்த நாணய வங்கிக் கொள்கை, நாணய வரலாறும் அமைப்பும், சர்வதேச வியாபார நிதி முறை.

**தாள் 5, தாள் 6**—19 ஆம், 20 ஆம் நூற்றாண்டுகளை விசேடமாகக் குறிப்பிட்ட ஐரோப்பா, அ. ஐ. அரசு, இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளின் பொருளியல் வரலாறு.

**தாள் 7, தாள் 8**—கணிதப்புள்ளி விவரமும், அதனைப் பொருளியல் துறையிலும் வர்த்தகத் துறையிலும் பிரயோகித்தல்.

**தாள் 9, தாள் 10**—உலகத்தின் தலைமையான அரசுகளின் அமைப்பும் நிர்வாகமும், அரசியல் சமூகவியல் கொள்கையும். அரசியல் கருத்துகளின் வரலாறு.

24. **அரசியல் (கீழ்ப்பிரிவு) இருதாள்கள் :—**

**தாள் I—சமூக, அரசியல் கொள்கைகள்.**—தேசிய அரசுகளின் கொள்கைகள், மக்கியாவெல்லி, போதின், ஒப்சு, லொக், ரூசோ, பரந்த கொள்கையுடைமை, சமூகவுடமை, (மாக்சிசம் உட்பட) ஆகியனவும் இவற்றையொத்த கொள்கைகளும், பாசிசம், தற்கால அரசின் சுதந்திரம், உரிமைகள், சமவுடைமை, சொத்து, தேசிய உரிமை பற்றிய கொள்கைகள்.

**தாள் II—இலங்கை அரசியல் முறைமை (1833 இலிருந்து).**—இலங்கையரிடையே அரசியல் உணர்வு வளர்ந்தமை, தேசிய உணர்வின் எழுச்சி, தேசிய சுதந்திர இயக்கம்.

அரசியல் நிறுவனங்களும் அவற்றின் தோற்றமும். மக்கள் அரசியலில் பங்குபற்றல்.

அரசியல் அமைப்புக்களும் நெருக்கடித் தொகுதிகளும், 1931 இலிருந்து அரசாங்கக் கடமைப் பொறுப்புக்களும

25. **அரசியல் (உயர்பிரிவு) நான்கு தாள்கள்.—**

**தாள் I—ஒப்பியல் அரசாங்கமும் அரசாங்கத் தத்துவங்களும்.**—ஐக்கிய இராச்சியம், அமெரிக்க ஐக்கிய அரசுகள், ஐ. ச. சோ. கு. பிரான்சு, சுவிற்சலாந்து, அவுத்திரேலியா, கனடா, ஸ்கந்திநேவியா, யப்பான், சீனு, இந்தியா.

தற்கால அரசாங்கங்களின் நிருவாக, சட்ட, நீதிமுறை முறைமைகள், நிருவாக முறைமைகள், பிரதிநிதித்துவ முறைகள.

**தாள் II—சர்வதேசத் தொடர்புகள்.**—1914 இல் இருந்து பிரதான நாடுகளுக்கிடையே சர்வதேசத் தொடர்புகள்.

சர்வதேச நேயக்குழு, ஐ.நா.தா. ஆகியனவும் அவற்றுடன் இணைந்துள்ள பிற நிறுவனங்களும்.

1945 இல் இருந்து சர்வதேச அரசியலைத் தீர்மானிக்கும் பிரதான காரணிகள்.

**தாள் III—உயர்ந்த அரசியல் கோட்பாடுகள்.**—1. பண்டை இந்திய அரசியல் கோட்பாடு (இந்து, பௌத்த) கிரேக்கர், புளேட்டோ, அரிஸ்ரோட்டில் நகர அரசு பற்றிய எண்ணங்கள், பண்டை உரோமன் அரசியல் சிந்தனையாளரும் சட்ட நிபுணருமாகிய ஒகஸ்தீன், தொமசு அகுனசு, தாந்தே, மார்சிலியோ, சீர்திருத்த இயக்கம், லூதர், கல்வின் நொக்சு.

**தாள் IV—உயர்ந்த அரசியல் கோட்பாடுகள்.**—மக்கிய வெல்லி, போதின்.

ஆங்கிலப் புரட்சியின் அரசியல் கோட்பாட்டாளர் பிரெஞ்சு அறிவொளிக்குக் காரணமான அரசியல் கோட்பாட்டாளர் அமெரிக்க அரசியல் யாப்புக்குத் தந்தையாகவுள்ளோர்.

ஒற்றோபர் புரட்சியின் அரசியல் கோட்பாட்டாளர்.

சீனப் புரட்சியின் அரசியல் கோட்பாட்டாவர்.

26. **சமூகவியல் (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள்.—**

**தாள் I—சமூகவியல் தத்துவங்கள்.**—சமூகவியல் விசாரணைத் துறையே வரையறுத்தல், சமூக நடத்தையின் உயிரினவியல, சாதி, பூகோளவியல், விளக்கங்களைக் கொண்டு அதனை மதிப்பிடல். சமூகவியலுக்கும் பிற மனிதப் பண்புக்கல்விக்கும் சமூக விஞ்ஞானத்துக்குமுள்ள தொடர்பு. சமூகம், பண்பாடு, ஆண்மை, அடிப்படைச் சமூகக் கோட்பாடுகள் ஆகியவற்றின் பாகு பாட்டு வேற்றுமை ; சமூக அமைப்பு, நிறுவகங்கள், படைபடையாகப் பிரித்தல், சமூகக் கட்டுப்பாடு, தொகுதி அமைப்பு, சமூக ஒருப்பாடு, சமூக மாற்றம் ஆகியவற்றின் அடிப்படைக் கொள்கையளவு ஒழுங்குபடுத்தல்.

**தாள் II—சமூகப் பிரச்சினைகளும் சமூக நிர்வாகமும்.**— குற்றம் பற்றிய கொள்கை, குற்றவியல் முறைகள், குற்றத்தடுப்புப் பிரச்சினைகள் பற்றிய இனம்பற்றிய கொள்கை ; சாதிக்கிளர்ச்சிச் சமூகவியல்.
சமுதாயநிலைப் புள்ளிவிபர ஆய்வு, ஆசிய நாடுகளை விசேடமாகக் கூறி, சனத்தொகை வளர்ச்சியும் பிரச்சினைகளும்.
சமூக சேவைகளின் வளர்ச்சியும் தன்மையும் சமூக சேவை நிர்வாகம்.
" சமூக சேவை ", " நலன்புரி சங்கம் " ஆகிய கொள்கைகளின் கருத்து ; தொழில் வயோதிபம், கல்வி, தீரச்செயல, சௌக்கியமும் நோயும், உழவர் பொருளாதாரப் பிரச்சினைகள் முதலியனவற்றைச் சிறப்பாகக் குறிப்பிட்டு சமூக தேவைகளை யும் ஏற்பாடுகளையும் ஆராய்தல். (இலங்கையை விசேடமாக ஆராய்தல் வேண்டும்).

27. **சமூகவியல் (உயர்வியல்) நான்கு தாள்கள்.—**

**தாள் I—ஒப்பியல் சமூக நிறுவகங்கள்.**—உறவும் குடும்பமும் ; சமூகப் பாகுபாடு (வர்ணம், குலம்), சமயம், பொருளியல் அமைப்பு, அரசியல் அமைப்பு ஆகியவற்றை ஒப்பிட்டு ஆராய்தல். பணித்துறை ஆட்சியும் முறையான அமைப்புக்களும் பற்றிய கொள்கை. ஒப்பியல் ஆய்வின் நோக்கமும் முறையும்.

**தாள் II—இலங்கையை விசேடமாகக் குறிப்பிட்டுத் தென் ஆசியா.**—உழவர் சமூகம், சமுதாயம் என்பதன் வரைவிலக்கணம. சமுதாய ஆய்வு பற்றி மீளாய்தல். உழவர் சமுதாயத்தை ஆராய்வதற்குக் கொள்கையளவு வேலைத் திட்டம்.
இந்தியா, இலங்கை பிற தெரிந்தெடுக்கப்பட்ட நாடுகள் ஆகியவற்றின் உறவுமுறையும் சமூகப் பாகுபாடும்.

உழவர் சமூகப் பொருளாதார இயல்புகள், பெறுமான முறைகளும் பிற தாபன இயல்புகளும்.

இந்து சமய, புத்த சமய சமூகவியல், அதன் ஒற்றுமையும் வேற்றுமையும்.

இலங்கையின் மரபு வழிச் சமுதாயத்தின் வரலாற்றுப் பாகுபாடு, மானிய முறையும் 19 ஆம் நூற்றுண்டின் சமுதாய மாற்றமும்.

அபிவிருத்தி குறைந்த நாடுகளின் பொருளாதார அபிவிருத்திப் பிரச்சனைகள்.

**தாள் III—சமூகவியலில் கொள்கைகளும் முறைகளும்.**—கொம்ரே காலம் முதல் சமூகவியல் வளர்ச்சி, உரு மலர்ச்சி, பரவல், தொழிற்படல் புதிய மலர்ச்சி, பற்றிய கொள்கைகள், தேர்கீம், வீபர், சிமெல், பரேரோ ஆகியோரும் 20 ஆம் நூற்றுண் மானிட வியலார், சமூகவியலாரும் கொள்கையளவில், அளித்துள்ள பங்கு. உ—ம். மலிநொஸ்கி, ரட்கிளிவ்–பிரவுண், போஸ், ஒப்புகவுசு, பார்சன்ஸ். –

**விஞ்ஞான முறை.**—விஞ்ஞான முறை விசாரணையும் உய்த்துணர்வும், தொகுதியறியுந் தன்மை பரிசோதனை முறைகள

சமூகவியல் பரிசீலனைகளில் விஞ்ஞான முறைகளைப் பிரயோகித்தல்.

சமூகவியலிலும் மானிடவியலிலும் வெளிக்கள நுட்பங்களும் செயலறிவு முறைகளும் (குறிப்பிட்ட ஒரு பிரச்சனையில் பரீட சார்த்திகள் ஓர் ஆராய்ச்சி முறையை உருவாக்குமாறு வேண்டப்படலாம்).

**தாள் IV—சமூக உளவியல்.**—ஆண்மை உருவாக்கம், சமுதாயப்படுத்தல், பண்பாடும் ஆண்மையும், தேசிய இயல்பு ஆகியவற்றில் சமூக காரணிகள், ஆண்மை அபிவிருத்தி, கற்றல், தூண்டல், நோக்கம் ஆகியவற்றின் கொள்கைகள். சிறிய தொகுதி ஆராய்ச்சியுட பட தொகுதி அமைப்பினதும் இயக்கத்தினதும் உளவியல் சார்ந்த பாகுபாடு. பொது அபிப்பிராயம் உருவாக்கப்படுவதைப் பாதிக்கும் காரணிகள். விவேகத்தில் தனிப்பட்ட, தொகுதியான வேற்றுமைகள். உளவியல் பரிசீலனைகளில் உபயோகிக்கப்படும் முறைகளும் நுட்பங்களும்.

**தாள் V—சமூக மனிதரியல்—**

(அ) சமூக மனிதரியலின் நோக்கமும் முறையும், அடிப்படைக் கொள்கைகள். (உ—ம்—சமூகம், சமூக அமைப்பு, சமூக நிறுவனம். பணியும் பண்பாடும்) பண்பாட்டு வளர்ச்சி, பகிர்வுக் கல்வி, பண்படுத்தலும் பண்பாட்டு மாற்றமும்.

(ஆ) மோர்கன், விரேசர், ரைலர், றீவேசு, இலியற் சிமித் ஆகியோரை விசேடமாகக் குறிப்பிட்டு சமூக மனிதரியலின் வரலாறு.

(இ) மனிதரியலில் அண்மையில் தோன்றியுள்ள போக்குக்கள். மலிநோஸ்கி, ரட்கிளிவ்வே, பிரேளன், இவான்சு—பிறிற்சாட் ஆகியோ ரின் நூல்களை விசேடமாகக் குறிப்பிட்டு தொழிற்பாட்டு அணுகு முறைமை.

(ஈ) தென்கிழக்காசியாவின் சமூக மனிதரியல்.

28. **பூகோளவியல் (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள் :—**

**தாள் I**—(அ) பௌதிகப் பூகோளவியல் தத்துவங்களும் (தரை அமைப்பு, வடகால், இயற்கைத் தாவரம், மண், கால நிலை, வானிலை. மனித பூகோளவியலிலும் மனிதர் பரவியிருத்தல், இடம் பெயர்ப்பு, சமூகம், பொருளாதாரம்).

(ஆ) இந்தியப் பிரேசத்தின் (இந்தியா, பாகிஸ்தான், பர்மா, இலங்கை) அல்லது ஐரோப்பாவின் பிரதேசத்தின் பூகோளவியல் பௌதிக, மனித பொருளாதாரம் அல்லது ஆங்கிலோ—அமெரிக்காவில் பிரதேசப் பூகோளவியல், பௌதிக மனித, பொருளாதாரம்.

**தாள் II**—பொதுவான படவேலை—இடவிவரப் படங்கள் (இலங்கை, ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அரசுகள்) ; ஆரம்ப நில அளவை (சங்கிலி, மட்டத்தளமேசை, பட்டக்மான கொம்பாசு) ; எறியும் (" பொதுப்பண்பு " எளிய அமைப்பு). [illegible]படம் (ஆரம்பப் புள்ளிவிவரத் தரவைத் தருதல்).

29. **பூகோளவியல் (உயர் பிரிவு) நான்கு தாள்கள் :—**

**தாள் I**—(அ) உயர்ந்த நிலவியல் பிரிவு (அடிப்படைப் புவிச் சரிதவியலுடன்) ; நில அமைப்புக்களின் தோற்றமும் விருத்தியும்.

(ஆ) உயர்ந்த வானியல் (அடிப்படை வானிலையுடன்) ; காலநிலைப் பிரதேசக் கொள்கைகள், உலகக் காலநிலைப் பாகுபாடும் முறைகளும் காலநிலை மாற்றங்களும்.

அல்லது (இ) உயர்ந்த உயிரின பூகோளவியல் அல்லது உயர்ந்த விவசாயப்பூகோளவியல்.

**தாள் II**—(அ) பொருளாதாரப் பூகோளவியல் முதன்மையான உற்பத்திகள் மின்வலு வளங்கள், கைத்தொழில் வியாபார நிலையங்கள். உள்நாட்டு, சர்வதேச வியாபாரங்கள்.

(ஆ) அல்லது ஆசியப் பிரதேசப் பூகோளவியல் (ஐ.சோ.ச.கு.) அல்லது இலத்தீன் அமெரிக்கர், பௌதிகம், மானிடர், பொருளாதாரம், வரலாறு, அரசியல்.

**தாள் III**—(அ) இலங்கை, இந்தியாவின் பிரேசப் பூகோளம், வௌதிகம், மானிடர், பொருளாதாரம், வரலாறு, அரசியல்.

(ஆ) அல்லது ஆபிரிக்கா, அவுஸ்திரேலியாவின் பிரதேசப் பூகோளம் அல்லது ஒப்பியல் பிரதேசக் கல்வியும் அரசியல் பூகோளமும்.

**தாள் IV**—(அ) நிலப்படவியல், வானத்திலிருந்து படம் பிடித்தல், புவிச்சரிதவியல், படங்கள், நிலப்படங்கள், நில அளவை, எறியமும். குறிவரைக் கணிப்பியலும்.

(ஆ) பட அமைப்புப் பற்றிய நுட்பங்களும் பிரயோகமும்.

30. **புதைபொருளியல் (கீழ்ப்பிரிவு) இருதாள்கள் :—**

**தாள் I**—புதைபொருள் அகழ்வு பற்றிய அடிப்படைத் தத்துவங்கள், இலங்கையில் கட்டிடக்கலை, சிற்பககலை, ஓவியம் ஆகியவற்றின் வரலாறு.

**தாள் II**—மிகப் பழைய காலந்தொட்டு கி. பி. 1505 வரை கல்வெட்டுக்களும் பழைய சுவடிகளும். இலங்கை நாணயங்களும்.

31. **புதைபொருளியல் (உயர்பிரிவு) நான்குதாள்கள் :—**

**தாள் I**—வரலாற்றுக்கு முற்பட்டவை, புதைபொருள் அகழ்வு பற்றிய அடிப்படைத் தத்துவங்களும், இலங்கையில் கட்டிடக்கலையின் வரலாறும்.

**தாள் II**—இலங்கையில் சிற்பக்கலையினதும் ஓவியத்தினதும் வரலாறு.

**தாள் III**—இலங்கையில் பிரபாகுமி கல்வெட்டுக்கள்.

**தாள் IV**—கி. பி. 8 ஆம் நூற்றுண்டிலிருந்து கி. பி. 1505 ஆம் ஆண்டு வரை கல்வெட்டுக்களும் பழைய சுவடிகளும் இலங்கை நாணயங்களும.

32. **மனிதரியல் (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள் :—**

**தாள் I**—பொது, உடலியல் சார்ந்த மனிதரியல்.

(அ) **பொது மனிதரியல்.**—உடல்சார்ந்த மனிதரியல் பற்றிய நோக்கமும் அவை பற்றிய கல்வியின் அடிப்படை முறைகளும், வரலாற்றுக்கு முற்பட்ட புதைபொருளியலும், சமூக மனிதரியலும். மனிதரியலின் அடிப்படைக் கொள்கைகள்.

(ஆ) **உடல்சார்ந்த மனிதரியல்.**—மிக முக்கியமான மனித உயிபற்ற பொருள், மானிடரின் தோற்றம், தோற்றம் பற்றிய பொதுக் கொள்கை, மக்கள் இனம் பற்றிய ஒப்பனவுக் கருவி, மானிட இனங்களை பாகுபடுத்திப் பகிரல், பிறப்புமரவு பற்றிய ஆரம்ப நூல்,

**பகுதி II**—வரலாற்றுக்கு முற்பட்ட புதைபொருளியலும் சமூக மனிதரியலும்.

(அ) **வரலாற்றுக்கு முற்பட்ட புதைபொருளியல்.**—பழைய கற்காலம், இடைக்காலம், புதிய கற்கால யுகங்களினது புதைபொருளியல்,

(ஆ) **சமூக மனிதரியல்.**—பண்பாட்டினதும் சமூகத்தினதும் இயல்பு, எளிய சமூகங்களில் சமூக தாபனங்களின் தத்துவங்கள் எளிய சமூகங்களின் சமயம், [illegible], அரசியல் நிறுவனங்கள்.

33. **பௌத்த நாகரீகம் (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள் .—**

**தாள் I**—பௌத்த சமயம் தோன்றிய போது பண்டை இந்தியாவின் சமயமும் சமூகமும் தறகாலிக அபிவிருத்தி உட்பட இந்தியாவில் பௌதத்தில் ஏற்பட்ட தாக்கமும் அதன் வரலாறும்.

**தாள் II**—ஆதிப் பௌத்த பிரிவுகளும் இந்தியாவுக்கு வெளியே பௌத்தம் பரம்பலும். தற்காலம்வரை அது உட்பட இலங்கை வரலாற்றில் பௌத்தம்.

34. **பௌத்த நாகரீகம் (உயர் பிரிவு) நான்கு தாள்கள் :—**

**தாள் I**—ஆதி பௌத்த நிறுவனங்கள், சங்கமும் துறவி மடத்தாபனங்களும், வினயவும், திருச்சபை சார்ந்த நடைமுறையும். பொதுமக்கள் சமுதாயமும், அதன் சமூக அமைப்பும் பௌத்த ஆராதனையும் சமய சடங்குகளும், பௌத்தத்தின் சமூகவியல்

**தாள் II**—பின்வருவனவற்றில் எவ்விரண்டு பிரதேசத்தினதும் பௌத்த கலையும் கட்டிடக்கலையும் :—

(அ) இந்தியா, பாகிஸ்தான், இலங்கை.

(ஆ) தென்கிழக்காசியா.

(இ) திபெற்றும் மத்திய ஆசியாவும்.

(ஈ) சீனு, யப்பான்.

**தாள் III**—சமூக நிறுவனங்கள், பண்பாடு, சட்டம் அரசியல் ஆகியவற்றில் பௌத்தம் செலுத்திய செல்வாககை விசேடமாகக் குறிப்பிட்டு, அல்லது இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பண்டை மத்திய கிழக்கு, தென் கிழக்காசியா ஆகியவற்றில் பௌத்தப் பாரம்பியமை அல்லது பௌத்தத்தின் தாக்கம்.

**தாள் IV**—திபெற், மத்திய ஆசியா, சீனு, கொரியா, யப்பான், தற்கால உலகம் ஆகியவற்றில் பௌத்தம் பாரம்பியமை.

35. **மெஞ்ஞானவியல் (கீழ்ப்பிரிவு) இருதாள்கள்.**—மேனுட்டவர் மெஞ்ஞானவியலின் வரலாறு.

(அ) அறிவியல் காலத்தை விசேடமாகக் குறிப்பிட்ட கிரேக்க மெஞ்ஞானம், சோபிஸ்ருக்கள், சொக்கிரேற்றிஸ், பிளேரோ, அறிஸ்ரோற்றில் பிற்கால அறநூல் காலம், புதிய பிளரோனிசம்.

(ஆ) இடைக்காலம், சென். ஒகத்தின், ஸ்கொரஸ், இயூஜின், அன்செலெம், தொமசு அக்குவினஸ், சென். போனு வெந்தர், டன்ஸ் ஸ்கொரசு, அரிசுதோத்திள் மீட்டல், உலகில் பிரச்சினைகள், முதலியன விசேடமாகக் குறிப்பிடல் வேண்டும்.

(இ) தற்கால மெஞ்ஞானம், மறுமலர்ச்சி, (புரோனே, பேக்கஸ், ஒப்ஸ்) பகுத்தறிவு முறைகள் (டெஸ்கார்ரிசு, ஸ்பைனோசா, லீப்னிற்சு, எம்பிரிசிசிம், ஒளிபெறல் (லொக், பேக்லி கியூம்) சேர்மன் குறிக்கோள் (கான்ற், பிசர், செலின், கீகல்) ஆகியவற்றை முதன்மையாகக் குறிப்பிடல் வேண்டும்.

**ஒழுக்கவியல்.**—ஒழுக்கம், பண்பு, சமயம் ஆகியவற்றின் இயற்கையும் நோக்கமும் ; ஒழுக்க முறை அறிவுப் பிரச்சினை, ஒழுக்க முன்னேற்றம், வழக்க முறையான ஒழுக்கம், ஒழுக்கக் கொள்கையின் பொதுத் தத்துவம், பகுத்தறிவு வாதம், அடோனிசம், என்டோமனசம், ஒழுக்க வழக்கம், ஒழுக்கங்கள், பால் பற்றிய வாழ்க்கை, சமூகக் கழகங்களின் தன்மை.

36. **மெஞ்ஞானவியல் (உயர்பிரிவு) நான்கு தாள்கள்.**—தாள் I ம், II ம் தர்க்கவியலும் அறிவாதாரவியலும்.—தர்க்கவியல், அறிவாதாரவியல் பிரச்சினை : அறிவின் தோற்றக் கொள்கைகள், அறிவுப் பிரச்சினை, கொள்கைகளின் கோட்பாடு தீர்ப்பு, அனுமானம் முறையான தர்க்கவியல், பொருண்மை சாராத தர்க்கவியல், கணிதத் தர்க்கவியல், தர்க்கவியல் உண்மை, உண்மையின் தன்மை, அறிவு, உண்மையின் பற்பல கொள்கைகள், உண்மையின் சோதனை.

**உளம் பற்றிய மெய் விளக்கவியல்.**—உளம் பற்றிய மெய் விளக்கவியலுக்கும் அறிவாதார இயலுக்குமுள்ள தொடர்பு. உளம் பற்றிய மெய் விளக்கவியலின் பொதுவான பிரச்சினைகள், சமகால மெஞ்ஞானவியல், உண்மையில், புதிய–உண்மையில், பிளேரோவின் கருத்தியற் கோட்பாடு, பேக்லி, கான்ற், கீகல் ஆகியோரின் கருத்தியற் கோட்பாடு. கடவுளும் படைப்பும், மொழி விளக்கம், விஞ்ஞான மெய் விளக்கவியல்.

**உளவியல் அல்லது இந்திய மெஞ்ஞானவியல்.**—இவ்விரு பிரிவுகளில் ஒன்றைப் பரீட்சார்த்திகள் எடுக்க வேண்டும்.

**தாள் III, IV உளவியல்.**—உளவியல் தன்மையும் நோக்கமும், உளவியல் முறை, உளம் உடல் தொடர் கொள்கைகள், உணர்ச்சி, காண்டல் ஞாபகம், கற்பனே, கோட்பாட்டுச் சிந்தனை, கருதாச் செய்கை, இயல்புணர்ச்சி விவேகம், மன உணர்ச்சி, மனக் கிளர்ச்சி, உணர்ச்சிக் களிவு, மனத்திட்பம், ஆண்மை, விலங்கின் உளவியல், மனித உளவியல், தனிப்பட்டோர் சமூக உளவியல், பிரயோக உளவியல், உளவியல் பற்றிய சம கால எண்ணங்கள் நடத்தை, ஒமிக் உளவியல் கெஸ்ரால், உளவியல், ஸ்பியமன் உளவியல், உளவியல் பாகுபாட்டுப் பிரிவுகள், பிறொயிட், அட்லர், ஜங்.

**மாற்றுன தாள்கள் III ம், IV ம் இந்திய மெஞ்ஞானவியல்.**—வேதங்கள், உப நிடதங்களின் சமயமும் மெஞ்ஞானமும், பகவத் கீதையினதும் காப்பியங்களினதும் போதனைகள், பௌத்தம், சமணம் ஆகியவற்றிற் தோற்றமும் வளர்ச்சியும், இந்திய உலோகாயுதம் (சர்வக்காரர்) தாச்சன் காலம், நியாய, வைசேஷித கோட்பாடுகள், மீமாம்ச கோட்பாடு, சமணர்களின் அநேகாந்த வாதம், பௌத்தர்களின் முந்திய இனயன கொள்கை, சாக்கியம், யோகம், மகாயன வேதாந்தக் கொள்கைகளின் தோற்றமும் வளர்ச்சியும்.

சங்கரரின் அத்துவைத வேதாந்தத்தின் முறை பற்றிய அல்லது பௌத்தரின் மகாயன கோட்பாடு அல்லது தொடக்கக் காலப் பௌத்தம் ஆகியவற்றன விரிவாக அறிந்திருத்தல் வேண்டும்.

37. **தூய கணிதம் (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள்.**—அட்சர கணிதம் (சிக்கலான எண் உட்பட) திரிகோண கணிதம், கேத்திர கணிதம், வகையீட்டு நுண் கணிதம், வகையீட்டுச் சமன்பாடு. இவ்விரு தாள்களும் முற்றுன பாடவிதானத்திலிருந்து கேள்விகளைக் கொண்டிருக்கும்.

38. **பிரயோக கணிதம் (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள்.**—ஒரு துணிக்கையினதும் விறைப்பான பொருளினதும் நிலையியலும் இயக்கவிசையினும். நீர் நிலையியல், ஈர்ப்பு விதி. இவ்விரு தாள்களும் முற்றுன பாடவிதானத்திலிருந்து கேள்விகளைக் கொண்டிருக்கும்.

39. **தூய கணிதம் (உயர்பிரிவு) நான்கு தாள்கள்.**—அட்சர கணிதம் (மற்றீசு உட்பட) கேத்திர கணிதம் வகுப்பு, வகையீட்டுச் சமன்பாடுகள், நிலையியல், இயக்கவிசையியல், ஈர்ப்பு விதி, மின்சக்தி மக்னெரிசம்.

**தாள் I, தாள் II,** தூயகணிதத்திலும் **தாள் III, IV** பிரயோக கணிதத்திலுமாக ஒவ்வொரு தாளும் முற்றுன பொருத்தமான பாட விதானத்தில் கேள்விகளைக் கொண்டிருக்கும்.

40. **பௌதிகவியல் (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள்.**—பொதுப் பௌதிகம், வெப்பம், வெப்ப இயக்கவிசையியல், அக்கூஸ்ரிக்ஸ்.

41. **பௌதிகவியல் (உயர்பிரிவு) நான்கு தாள்கள்.**—பொதுப் பௌதிகம், வெப்பமும் வெப்ப இயக்க விசையில் அக்கூரிக்ஸ்

42. **இரசாயனவியல் (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள்**—

**தாள் I**—பொது, அசேதன உறுப்பு இரசாயனவியல், பௌதிக இரசாயனவியல்.

**தாள் II**—சேதனவுறுப்பு இரசாயனவியல்.

43. **இரசாயனவியல் (உயர்பிரிவு) நான்கு தாள்கள்**—

**தாள் I**—பொது, அசேதன உறுப்பு இரசாயனவியல்.

**தாள் II**—பௌதிக இரசாயனவியல்.

**தாள் III**—சேதனவுறுப்பு இரசாயனவியல I

**தாள் IV**—சேதனவுறுப்பு இரசாயனவியல் II.

44. **தாவரவியல் (கீழ்ப்பிரிவு) இரு தாள்கள்**—

**தாள் I**—உடலாக்க நூலும் பொது உடற்கூற்று நூலும், தலோபிர, பிரேயோபிர, லீறியோடோபிர, சிம்னஸபேம.

**தாள் II**—ஸ்பேர்மரோபிற்றுவின் இயற்கையுருவ ஆராய்ச்சி.

**குறிப்பு.**—ஒவ்வொரு தாளுக்குரிய விடயம் மாட்டேற்றுக் குறிப்புக்களுக்கு அமைந்ததாகும். பாகுபாடு சம்பந்தமாக—சிறப்பாக அங்கி யஸபேம் குடும்பம் சம்பந்தமாகவும் இலங்கையின் தாவரமும் தாவரவியலும் சிறப்பாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

45. **தாவரவியல் (உயர்பிரிவு) நான்கு தாள்கள்**—

**தாள் I**—தலோபிர, பிறையோபிர, ரெறிடோபிர, ஜிம்னஸ்பேம்ஸ், மரநோய்க்கூறு.

**தாள் II**—வகுப்புத் தொகுப்பு முறையியல், இயற்கையுருவ ஆராய்ச்சி ஸ்பேர்மரோபிறறுவின் இயற்கையுருவ ஆராய்ச்சி முதலியன.

**தாள் III**—உடல் நூல்.

**தாள் IV**—பொருளாதாரவியலின் சுருக்கம்.

**(குறிப்பு.**—கீழ்ப்பிரிவின் பாடவிதானத்தைப் பார்க்க).

46. **விலங்கியல் (கீழ்ப்பிரிவு) இருதாள்கள்.**—இன்வேட்டி பிறுரா, தோற்றல் விலங்குகளின் புவியியல் சம்பந்தமான பரம்பல், வேட்டிபிறுரா, எம்பிரையோல்ஜி, சைரொலொஜி, எறிடிரி, எகொலஜி.

47. **விலங்கியல் (உயர்பிரிவு) நான்குதாள்கள்.**—இன்வேட்டிபிறுரா, வேட்டிபிறுரா, பொருளாதார விலங்கியல்.

48. **அரசாங்க நிருவாகம்.**—அரசாங்க நிருவாகமொன்றூல் என்ன ? நிருவாக முறைமை, நிறைவேற்று ஆட்சி—இலங்கையில் அதன் அதிகாரமும் அதன் அமைப்பும் பணித்துறை ஆட்சி, அரசாங்க வேசை—அதன் அமைப்பு முறையும் முகாமையும் சமூக நலஞேம்பு அரசியல் அதன் கடமை. நிருவாகத்தின் பாராளுமன்ற, நீதிமுறைக் கட்டுப்பாடு ; அரசாங்க முயற்சிகள் மீதுள்ள பாராளுமன்ற அமைச்சர் கட்டுப்பாடு ; அரசாங்க முயற்சிகள் மீதுள்ள பாராளுமன்ற அமைச்சர் கட்டுப்பாடுகள். இலங்கையில் அவற்றின் முகாமைச்சிக்கல்கள். உள்ளூராட்சி என்பதன் கருத்து, இலங்கையில் உள்ளூராட்சியின் விருத்தி. அதன் இப்போதைய அமைப்பு. பற்பல உள்ளூராட்சிச் சபைகளின் பணிகளும் அதிகாரங்களும். அவற்றின் நிதி. உள்ளூராட்சிச் சேவை ஆணைக்குழு.

49. **அரசாங்க நிதி.**—அரசாங்க நிதியென்றூல் என்ன ? வரிவிதிப்புக் கொள்கை, நேர்வரிகளும், மறைமுகமான வரிகளும்—வரிகளின் தாக்கம், வரிவீதம், விளைவு. அரசாங்க செலவு பற்றிய கொள்கை. அரசாங்கச் செலவின் கட்டுப்பாடு. அரசாங்கக் கடன் பற்றி கொள்கை. அரசாங்க பணக் கொள்கை. நிதி நிருவாகமும் வரவு செலவுத் திட்ட நடைமுறையும். நிதி பற்றிய பாராளுமன்றக் கட்டுப்பாடு. இலங்கையில் மத்திய அரசாங்க நிதியும் உள்ளூராட்சி நிதியும்.

50. **அலுவல் நிருவாகம்—கொள்கையும் சாதனையும்.**—அலுவல் நிருவாகம் கற்க வேண்டிய அவசியமும் அதனை அணுகும் முறையும். இலங்கையை விசேடமாகக் குறிப்பிட்டு, அலுவல் சுற்றுடல், அலுவல் மூலவளங்கள், செயல்முறைகள் ஆகியன. சட்ட இயல்புகள் உட்பட அலுவல், அரசாங்கத் தொடர்புகள். பற்பல வகையான முகாமைப் பிரச்சினைகளைப் பாகுபடுத்தும் வல்லமையும், அலுவல் பிரச்சினைகளையும் செயல் முறையாக அலுவல் பற்றிய தீர்மானங்களையும் தீர்ப்பதற்குப் பொருளாதாரப் பாகுபாட்டைப் பிரயோகிக்கும் வல்லமையும் எதிர்பார்க்கப்படும். பொருளாதார, அலுவல் சஞ்சிகைகளும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் ஆண்டு அறிக்கைகளும் வாசித்திருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படும்.

51. **முகாமைத் தத்துவங்கள்.**—வரையறை, நோக்கம் அடிப்படை, முகாமைச் சிந்தனை விருத்தி. சமூகப் பொறுப்புக்களும் முகாமையும் முகாமை பற்றிய அமைப்புக் கொள்கை, நிருவாகப் போக்கு, உளவியல். முகாமை பற்றிய தீர்மானஞ் செய்கையில் விஞ்ஞான முறைகளைப் பிரயோகித்தல்.

தேர்ந்தெடுக்கப்படும் சில பிரதேசங்களில் முகாமை முறை, உற்பத்தி, நிதி, போக்குவரத்து, ஆளணி நிருவாகம், கைத்தொழில் உறவு.

52. **சந்தைப்படுத்தல்.**—வரையறை நோக்கம், கடமை, பொருளாதார விருத்திக்கு அளிக்கும் முக்கியத்துவம்.
நுகர்வோர் போக்கு.

சந்தைப்படுத்தலைக் கற்கும் வகை.

சந்தைப்படுத்தல் தொழிலும் நிறுவனங்களும் (மொத்தவிற்பனை, சில்லறை விற்பனை) இலங்கையைச் சிறப்பாகக் குறிப்பிட்டு சந்தைப்படுத்தல கொள்கைகளும் வழங்கல்களும். வணிகத் தொழில் விலைகுறிப்பிடல், விநியோக முறைகள், ஆள் விநியோகம் (Logistics) சந்தை ஆராய்ச்சி, விளம்பரம், விற்பனையை மேம்படுத்தலும் பொது உறவும், கூட்டுறவுச் சந்தை, சந்தைப்படுத்தல், மாற்றப்படும் மாதிரிகள்.

53. **கல்வி உளவியல்—தாள் I.**—குழந்தைப்பருவந் தொடக்கம் முதிர்ச்சியடையும் வரை அறிவு விருத்தி. அறிவு விருத்தியைப் பாதிக்கு மளவுக்கு உடல், சமூகம், உணர்வு அபிதிருத்தி, புலனுணர்ச்சி, ஞாபகம், சிந்தனை, பிரச்சினை தீர்த்தல் பற்றிய செய்முறைகள் கற்றல் பற்றிய கொள்கைகள். கற்றதைப் பிறருக்குக் கொடுத்தல், படிப்பில் அறிவுசாராக் காரணிகள். மிகப்புறநடையான பிள்ளைகள்—அறிவு வளர்ச்சியற்றவர் மந்தமாகக் கற்பவர், இயற்கைத் திறனுடையோர். போக்குக்களும், திறன்களும் கற்றல், ஆளுமை விருத்தியும் அறிவுச் சுகாதாரமும். கல்வி சம்பந்தமான வழிகாட்டுகை.

**தாள் II.**—அறிவு அளவிடுந்தன்மை. அறிவை அளவிடுகையில் புள்ளிவிவரக் கொள்கைகளும் முறைகளும். கல்வி, உளவியல் அளவீட்டின் நோக்கங்கள். சோதனை அமைப்பில் புள்ளிவிவரக் குறியீடுகள், கல்வி உளவியல் சோதனைகள் அமைத்தல், தரப்படுத்தல் பயன்படுத்தல்

54. **கல்வித் தத்துவங்கள்.**—

1. கல்வி, கல்வி நோக்கங்கள் பற்றிய கொள்கை.
2. கல்வியின் முக்கியத்துவம்—தனியார் கல்வி, சமூகக் கல்வி.
3. பிலேரோ, ருசோ, டியூயி, தாகூர், காந்தி ஆகியோரின் கல்வி பற்றிய மெஞ்ஞானவியல்.
4. கல்வியின் ஒழுக்கஞ்சார்ந்த, சமய காரணிகள்.
5. கல்வி, மனித தொடர்புகள்.
6. பொருளாதாரம், அரசியல், சமூகம் கல்வி. பள்ளிக்கூடத்தை ஒரு தேசிய நிறுவனமாகக் கருதல.
7. பண்பாடு, சமுதாயம், சமூகத் தொகுதிகள், சமூகமயமாக்கல்.
8. ஒரு பள்ளிக்கூடத்தின் சமூக முறைமை.
9. கல்வியின் பொருளடக்கம், பாடத்திட்டம் பற்றிய கொள்கை—பொது, சிறப்புக்கல்வி, தாராளமான. செயல்முறைககல்வி, பாட விதான அமைப்புப் பற்றிய தத்துவங்களும், தீர்மானங்களும் கருவிகளும்.
10. பல்கலைக்கழகங்களினதும் பிற உயர் கல்வி நிறுவனங்களினதும் பணியும் கடமையும
11. கற்பிக்குந் தொழிலும் ஆசிரியர் கடமையும்.

55. **ஒப்பியற் கல்வி.**—

(i) ஒப்பியற் கல்விக் கொள்கை, கல்விக் கொள்கையின் அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு உறுதிப்படுகளைக் கற்றலும பல்வேறு நாடுகளிலும் அவை பற்றிய செயல்முறைகளும்.

(ii) அபிவிருத்தியடைந்த, அபிவிருத்தியடையும் நாடுகளில் கல்விப் போக்குக்கள்—இவ்வகுதிகட்குப் பிரதிநிதியாகவிருக்கும் ஒரு தொகுதி நாடுகளைப் பற்றிக் கற்று அது பற்றி விளக்கல்.

(iii) இலங்கையின் வரலாறு, பண்பாடு, சமூக—பொருளாதார நோக்குக்களைப் பின்னணியாகக் கொண்டு கற்ற இலங்கையின் கல்வி முறைகள்.

(iv) இலங்கையின் கல்விப் பிரச்சினைகளும் பிறநாடுகளில் அவற்றையொத்த பிரச்சினைகளும்.

56. **ஆட்கள் உடமைச் சட்டம்.**—உரோமன்–டச்சுச் சட்டங்களின் தத்துவம்–அவை இலங்கையில் பிரயோகிக்கப்படும் முறைகளை விசேடமாகக் குறிப்பிடல் வேண்டும்.

57. **கடப்பாட்டுச் சட்டம்.**—ஒப்பந்தம், சட்ட மீறுகை மருவிய ஒப்பந்தம் ஆகியவற்றின் உரோமன்–டச்சுச் சட்டத் தத்துவங்களும், பொருத்தமானவிடத்து ஆங்கிலச் சட்டங்களும்.

58. **உரோமன் சட்டம்.**—உரோமன் தனிப்பட்ட சட்டமும் அதன் வரலாறும், கையசு, ஜஸ்ரினியன் நிறுவகங்களுடன் தொடர்புபடுத்திப்படித்தல் வேண்டும். மொழி பெயர்ப்புக்கும் குறிப்புரைகளுக்குமாகப் பகுதிகள் தரப்படும். நூல்களை மொழி பெயர்க்கும் அறிவுக்கு மாத்திரம் திறமை காட்டப்படமாட்டாது.

59. **அரசியலமைப்புச் சட்டம்.**—ஆங்கில அரசியல் அமைப்புச் சட்டம், ஐக்கிய இராச்சியத்திற்கும் பிரிட்டிசுப் பொதுநல ஆசுகளுக்குமிடையேயுள்ள தொடர்பு. இலங்கையின் அரசியலமைப்புச் சட்டம்.

60. **சர்வதேச சட்டம்.**—சர்வதேச அமைப்பு உட்பட சர்வதேசச் சமாதானச் சட்டம்.

61. **நிதி வன்மையும் சட்டக் கொள்கையும்.**—பேரரசாட்சிக் கொள்கையுட்பட, சட்டத்தன்மை பற்றிய கொள்கைகள், ஆங்கில, உரோமன் சட்டங்களை விசேடமாகக் குறிப்பிட்டு, சட்டத்தின் மூலமும் விருத்தியும் உரிமைகளினதும் கடமைகளினதும் தன்மையும் அவற்றின் பாகுபாடும். சட்டவன்மை முறைகள்.

62. **கிறிமினல் சட்டம்.**—கிறிமினல் நடைமுறை உட்படாது. ஆங்கில கிறிமினல் சட்டமும் இலங்கைக் கிறிமினல் சட்டமும்.

63. **வாய்மொழிப் பரீட்சை.**—(பொது) பரீட்சார்த்திகள் ஒரு சபையினால் நேர்முகப் பரீட்சை செய்யப்படுவர். அச் சபையிடம் பரீட்சார்த்தியின் வரலாறு பற்றிய பதிவுகள் இருக்கும். பொதுவாக நயப்பான விடயங்கள் பற்றி அவரிடம் கேள்விகள் கேட்கப்படும். நேர்முகப் பரீட்சையின் நோக்கம் என்னவெனில் அவர் சேரவுள்ள சேவைக்குத் தகுதியுடையவரோவென மதிப்பிடுவதாகும். இவ்வாறு மதிப்பிடுகையில் சபையானது அவரின் விவேகத்திற்கும் விளிப்பான தன்மைக்கும், பண்பிற்கும், தலைமை தாங்க கூடிய வலமைக்கும் முதன்மை அளிக்கும்.

எழுத்துப் பரீட்சையில் போதிய அளவான உயர் தரத்தையடையும் பரீட்சார்த்திகள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

## பிரிவு இ.

64. **உலக அலுவல்கள்.**—இது, இரு மணித்தியாலங்களுக்கு நடைபெறும் ஒரு தாளாகும். தற்கால உலக நிலையை விசேடமாகக் குறிப்பிட்டு உலக அலுவல்கள் பற்றிய பரீட்சார்த்தியின் அறிவைப் பரீட்சிப்பதாயமையும். இப் பாடத்தை எம்மொழியில் பரீட்சார்த்திகள் எடுப்பர் என்பதை அவர்கள் குறிப்பிடல் வேண்டும்.

65. **வாய்மொழிப் பரீட்சை (விசேட).**—(பொது) வாய்மொழிப் பரீட்சையும் இப்பரீட்சை பரீட்சார்த்திகள் கடல்கடந்த சேவைக்குத் தகுதியுடையவரோவென நிச்சயிப்பதற்கு அமைந்துள்ளது. அவர்களின் சொந்தப் பண்பும், பிறநாட்டறிவு, சர்வதேச அலுவல்கள், சருவதேச சட்டம், பிறநாட்டு மொழிகளின் அறிவு போன்ற பிற விசேட அறிவும் கவனிக்கப்படும்.

5–673—29.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,908

---

இல. 5/65 பகுதி—II

இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பிற்கும் இலங்கை கடல் கடந்த சேவைக்கும் அனுமதிப்பதற்கான வரையறுப் போட்டிப் பரீட்சையின் பின்வரும் பரீட்சைத் திட்டத்தைப் பிரசுரிக்கும் படியாக அரசாங்கச் சேவை ஆணைக்குழு கட்டளையிட்டுள்ளது.

14,893 ஆம் இலக்கத்து 1970.2.13 ஆந் தேதிய அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1970.1.31 ஆந் தேதிய பரீட்சைத் திட்டம் இத்தால் நிராகரிக்கப்படுகின்றது.

டி. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலகம்,
த. பெ. இல. 500,
கொழும்பு 1,
1970, மே மாதம் 10 ஆந் தேதி.

## இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பிற்கும் இலங்கை கடல் கடந்த சேவைக்கும் அனுமதிப்பதற்கான வரையறுப் போட்டிப் பரீட்சை

### பரீட்சைத் திட்டம்

**பரீட்சைத் திட்டம்.**—இந்தப் போட்டிப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

(அ) கட்டாய பாடங்கள்—கட்டுரை, சுருக்கியெழுதல், பொது அறிவு. பரீட்சார்த்திகள் இப்பாடங்களை எம்மொழி மூலம் எடுப்பர் என்பதைக் குறிப்பிடுதல் வேண்டும். அபேட்சகர்கள் கட்டாய பாடங்களை ஒரு மொழி மூலத்தில் மட்டுமே எடுத்தல் வேண்டும். அபேட்சகர்கள் கட்டாய பாடங்களை எடுக்கும் மொழி மூலமே அவர்கள் அரசாங்க சேவையில் புகும் மொழி மூலமாகக் கருதப்படும்.

(ஆ) **விருப்புரிமைப் பாடங்கள்**—(i) அபேட்சகர் தேர்ந்தெடுக்கும் பாடம் அவரால் பட்டப் பரீட்சைக்கு எடுக்கப்பட்டதாயின் பட்டப் பரீட்சையில் அப்பாடத்தை எம் மொழியில் எழுதிச் சித்தியடைந்தாரோ அம் மொழியிலேயே எழுதுதல் வேண்டும்.

(ii) பிற சந்தர்ப்பங்கள் யாவற்றிலும் அத்தகைய பாடங்களைத் தான் எடுக்க விரும்பும் மொழி மூலத்தை விருப்புரிமை ஒழுங்கில் அபேட்சகர் குறிப்பிடுதல் வேண்டும். இந்தப் பாடங்களை எம் மொழியில் எடுக்க அபேட்சகர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்பதனை ஆணைக்குழு தனது தற்றுணிபின்படி தீர்மானிக்கும்.

இப்பரீட்சை பின்வரும் பாடங்களையுடையதாயிருக்கும். ஒவ்வொரு பாடத்துக்கும் அதற்கெதிராகக் காட்டப்படும் புள்ளிகள் கொடுக்கப்படும்.

**பிரிவு (அ) எல்லா அபேட்சகர்களும் கட்டாயமாக எடுத்தல் வேண்டும்**

| | | புள்ளிகள் |
|---|---|---|
| 1. கட்டுரை | .. .. | 150 |
| 2. சுருக்கியெழுதல் | .. .. | 100 |
| 3. பொது அறிவு .. | .. .. | 150 |

**பிரிவு (ஆ) விருப்புரிமைப் பாடங்களும் வாய்மொழிப் பரீட்சையும் (பொது**

விருப்புரிமைப் பாடங்கள். இப்பிரிவில் மொத்தம் 600 புள்ளிகள் வரைஅபேட்சகர்கள் விருப்புரிமைப் பாடங்களை (4–62) எடுத்தல் வேண்டும்.

| | | புள்ளிகள் |
|---|---|---|
| 4. சிங்களம் (கீழ்ப்பிரிவு) .. | இரு தாள்கள் .. | 200 |
| 5. சிங்களம் (உயர் பிரிவு) .. | நான்கு தாள்கள் .. | 400 |
| 6. தமிழ் (கீழ்ப்பிரிவு) .. | இரு தாள்கள் .. | 200 |
| 7. தமிழ் (உயர் பிரிவு) .. | நான்கு தாள்கள் .. | 400 |
| 8. அராபி (கீழ்ப்பிரிவு) .. | இரு தாள்கள் .. | 200 |
| 9. அராபி (உயர்பிரிவு) .. | நான்கு தாள்கள் .. | 400 |
| 10. சமஸ்கிருதம் (கீழ்ப்பிரிவு) .. | இரு தாள்கள் .. | 200 |
| 11. சமஸ்கிருதம் (உயரபிரிவு) .. | நான்கு தாள்கள் .. | 400 |
| 12. பாளி (கீழ்ப்பிரிவு) .. | இரு தாள்கள் .. | 200 |
| 13. பாளி (உயர்பிரிவு) .. | நான்கு தாள்கள் .. | 400 |
| 14. ஆங்கிலம் (கீழ்ப்பிரிவு) .. | இரு தாள்கள் .. | 200 |
| 15. ஆங்கிலம் (உயர்பிரிவு) .. | நான்கு தாள்கள் .. | 400 |
| 16. இலத்தீன் (கீழ்ப்பிரிவு) .. | இரு தாள்கள் .. | 200 |
| 17. கிறீக் (கீழ்ப்பிரிவு) .. | இரு தாள்கள் .. | 200 |
| 18. கிலாசிக் (உயர்பிரிவு) .. | நான்கு தாள்கள் .. | 400 |
| 19. பிரெஞ்சு (கீழ்ப்பிரிவு) .. | இரு தாள்கள் .. | 200 |
| 20. வரலாறு (கீழ்ப்பிரிவு) .. | நான்கு தாள்களில் இரு தாள்கள் .. | 200 |
| 21. வரலாறு (உயர்பிரிவு) .. | எட்டுத் தாள்களில் நான்கு தாள்கள் .. | 400 |
| 22. பொருளியல் (கீழ்ப்பிரிவு) .. | இரு தாள்கள் .. | 200 |
| 23. பொருளியல் (உயர்பிரிவு) .. | பத்துத் தாள்களில் நான்கு தாள்கள் .. | 400 |
| 24. அரசியல் (கீழ்ப்பிரிவு) .. | இரு தாள்கள் .. | 200 |
| 25. அரசியல் (உயர்பிரிவு) .. | நான்கு தாள்கள் .. | 400 |
| 26. சமூகவியல் (கீழ்ப்பிரிவு) .. | இரு தாள்கள் .. | 200 |
| 27. சமூகவியல் (உயர்பிரிவு) .. | ஐந்து தாள்களில் 4 நாள்கள் .. | 400 |
| 28. பூகோளவியல் (கீழ்ப்பிரிவு) .. | இரு தாள்கள் .. | 200 |
| 29. பூகோளவியல் (உயர்பிரிவு) .. | நான்கு தாள்கள் .. | 400 |
| 30. தொல்பொருளியல் (கீழ்ப்பிரிவு) .. | இரு தாள்கள் .. | 200 |

| | | |
|---|---|---|
| 31. தொல்பொருளியல் (உயர்பிரிவு) .. | நான்கு தாள்கள் .. | 400 |
| 32. மனித இயல் (கீழ்ப்பிரிவு) .. | இரு தாள்கள் .. | 200 |
| 33. பௌத்த நாகரீகம் (கீழ்ப்பிரிவு) .. | இரு தாள்கள் .. | 200 |
| 34. பௌத்த நாகரீகம் (உயர்பிரிவு) .. | நான்கு தாள்கள் .. | 400 |
| 35. மெய்யியல் (கீழ்ப்பிரிவு) .. | இரு தாள்கள் .. | 200 |
| 36. மெய்யியல் (உயர்பிரிவு) .. | ஆறு தாள்களில் நான்கு தாள்கள் .. | 400 |
| 37. தூயகணிதம் (கீழ்ப்பிரிவு) .. | இரு தாள்கள் .. | 200 |
| 38. பிரயோக கணிதம் (கீழ்ப்பிரிவு) .. | இரு தாள்கள் .. | 200 |
| 39. கணிதம் (உயர்பிரிவு) .. | நான்கு தாள்கள் .. | 400 |
| 40. பௌதிகவியல் (கீழ்ப்பிரிவு) .. | இரு தாள்கள் .. | 200 |
| 41. பௌதிகவியல் (உயர்பிரிவு) .. | நான்கு தாள்கள் .. | 400 |
| 42. இரசாயனவியல் (கீழ்ப்பிரிவு) .. | இரு தாள்கள் .. | 200 |
| 43. இரசாயனவியல் (உயர்பிரிவு) .. | நான்கு தாள்கள் .. | 400 |
| 44. தாவரவியல் (கீழ்ப்பிரிவு) .. | இரு தாள்கள் .. | 200 |
| 45. தாவரவியல் (உயர்பிரிவு) .. | நான்கு தாள்கள் .. | 400 |
| 46. விலங்கியல் (கீழ்ப்பிரிவு) .. | இரு தாள்கள் .. | 200 |
| 47. விலங்கியல் (உயர்பிரிவு) .. | நான்கு தாள்கள் .. | 400 |
| 48. பொது நிருவாகம் .. | ஒரு தாள் .. | 100 |
| 49. பொது நிதி .. .. | ஒரு தாள் .. | 100 |
| 50. தொழில் நிருவாகம் .. | ஒரு தாள் .. | 100 |
| 51. முகாமைத் தத்துவங்கள் .. | ஒரு தாள் .. | 100 |
| 52. சந்தைப்படுத்தல் .. | ஒரு தாள் .. | 100 |
| 53. கல்வி உளவியல் .. | இரு தாள்கள் .. | 200 |
| 54. கல்வித் தத்துவங்கள் .. | ஒரு தாள் .. | 100 |
| 55. ஒப்பீட்டுக் கல்வி .. | ஒரு தாள் .. | 100 |
| 56. ஆட்கள் உடைமைகள் சட்டம் .. | ஒரு தாள் .. | 100 |
| 57. கடப்பாடுகள் சட்டம் .. | ஒரு தாள் .. | 100 |
| 58. உரோமன் சட்டம் .. | ஒரு தாள் .. | 100 |
| 59. அரசியலமைப்புச் சட்டம் .. | ஒரு தாள் .. | 100 |
| 60. சர்வதேசச் சட்டம் .. | ஒரு தாள் .. | 100 |
| 61. நீதி வன்மையும் சட்டக்கொள்கையும் .. | ஒரு தாள் .. | 100 |
| 62. கிறிமினல் சட்டம் .. | ஒரு தாள் .. | 100 |
| 63. வாய்மொழிப் பரீட்சை (பொது) .. | .. | 200 |

**பிரிவு (இ) இலங்கை கடல் கடந்த சேவைக்கான அபேட்சகர்களுக்குச் கட்டாயமானது**

| | | |
|---|---|---|
| 64. உலக அலுவல்கள் .. | ஒரு தாள் .. | 100 |
| 65. வாய்மொழிப் பரீட்சை (சிறப்பு) .. | .. | 150 |

**குறிப்பு**

(i) இயற்கை விஞ்ஞானப் பாடமொன்றினை (பாடம் 40 முதல் 47 உட்பட) எடுக்கும் அபேட்சகர் பல்கலைக்கழகத் தரத்திலுள்ள ஒரு கழகத்திலிருந்து ஆய்கூடப் பயிற்சிச் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும். அச் சான்றிதழ் கழகத் தலைவரினால் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) பூகோளவியலைப் பாடமாக எடுக்கும் வெளி அபேட்சகர்களும் தனிப்பட்ட அபேட்சகர்களும் பல்கலைக்கழகத்தரமுள்ள ஒரு கழகத்தில் அப்பாடத்தில் செயல்முறைப் பயிற்சி பெற்றுள்ளதாக ஒரு சான்றிதழ் சமர்ப்பித்தல் வேண்டும். அச் சான்றிதழ் கழகத் தலைவரினால் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) ஒவ்வொரு பாடத்திற்குமென அபேட்சகர்களுக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகளிலிருந்து, வெறும் மேலீடான அறிவுக்குத் திறமை பாராட்டாத வாறு பரிசோதகர்கள் அவசியமெனக் கருதும் அத்தகைய புள்ளிகள் கழிக்கப்படும்.

(iv) அபேட்சகர் ஒருவரின் எழுத்து தெளிவாக இல்லாதிருப்பின் இதன் பொருட்டு அவருக்கு சேரும் மொத்தப் புள்ளிகளிலிருந்து கணிசமான புள்ளிகள் கழிக்கப்படும்.

(v) சொல்லமைதியுடன் ஒழுங்காகவும் பயன்படு முறையிலும் திட்பமாகவும் அமையுங்கூற்றுக்களுக்குத் திறமைப் பேறு கொடுக்கப்படும். இது மொழிக்கென விசேடமாகவுள்ள பாடத்திற்கு மட்டுமன்றி இப் பரீட்சையின் பாடங்கள் அனைத்திற்கும் பொருந்தும்.

(vi) வாய்மொழிப் பரீட்சை நடாத்தும் சபைக்கு எழுத்துப் பரீட்சையில் பரீட்சார்த்திகள் பெற்றுள்ள புள்ளிகள் கொடுக்கப்படமாட்டா.

இப் பரீட்சை இரு பகுதிகளாக நடாத்தப்படும். கட்டாய பாடங்களாகிய வியாசம், சுருக்கியெழுதல், பொது அறிவு ஆகியவற்றைக் கொண்டுள்ள "அ" பிரிவுப் பரீட்சை முதலில் நடாத்தப்படும். "அ" பிரிவுப் பரீட்சை முடிவில் "ஆ" பிரிவுப் பரீட்சையெடுக்க அனுமதிக்கப்படும் அபேட்சகர்களின் எண்ணிக்கை இலங்கை நிருவாகச் சேவையில் அப்பொழுதுள்ள வெற்றுப்பதவிகளின் எண்ணிக்கையின் மூன்று மடங்காகும்.

இப்பரீட்சையின் "ஆ" பிரிவு 600 புள்ளிகளைக் கொண்டுள்ள விருப்புரிமைப் பாடங்களையும் 200 புள்ளிகளைக் கொண்டுள்ள வாய்மொழிப் பரீட்சையையும் (பொது) உடையதாயிருக்கும். இலங்கை கடல்கடந்த சேவைக்குப் புகும் அபேட்சகர்கள் விருப்புரிமைப் பாடங்களோடும் வாய்மொழிப் பரீட்சையோடும் (பொது) 100 புள்ளிகளைக் கொண்டுள்ள உலக அலுவல்கள் தாளையும் எடுக்குமாறு வேண்டப்படுவர். உலக அலுவல்கள் தாளில் போதுமான உயர்தரத்தையடையும் அபேட்சகர்கள் வாய்மொழிப் பரீட்சைக்கு (சிறப்பு) அழைக்கப்படுவர். இந்த உயர்தரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

இலங்கை நிருவாகச் சேவையில் நியமிப்பதற்குத் தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களின் இறுதித் திறன் வரிசை, அபேட்சகர்கள் "அ", "ஆ" ஆகிய இரு பிரிவுகளிலும் பெற்ற புள்ளிகளை ஆராய்ந்த பின்னரும் இலங்கை கடல் கடந்த சேவைக்கு நியமிப்பதற்கு தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களின் இறுதித் திறன் வரிசை அவர்கள் "அ", "ஆ", "இ" ஆகிய பிரிவுகளில் எடுத்த் புள்ளிகளை ஆராய்ந்த பின்னரும் தீர்மானிக்கப்படும்.

5–677—29.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,908

---

இல. 1/23/29/3 (ஜி)

## சிறுப்பர் சேவையின் III ம் வகுப்புக்கு ஆட்களைச் சேர்ப்பதற்கான பரீட்சை—ஓகத்து 1970

**1. பரீட்சைத் தேதி 1970, ஓகத்து மாதம் 30 ஆந் தேதி**

சிறுப்பர் சேவையின் III ஆம் வகுப்பிற் சேரவிரும்பும் பரீட்சார்த்திகளுக்குரிய போட்டிப் பரீட்சையொன்று கொழும்பிலும் பின்வரும் நிலையங்களிலும் 1970, ஓகத்து 30 ஆந் தேதி நடாத்தப்படும் :—கொழும்பு, கம்பகா, நீர்கொழும்பு, மொரட்டுவா, களுத்துறை, கண்டி, மாத்தளை, நுவரெலியா, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், பருத்தித்துறை, வட்டுக்கோட்டை, மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை, திருக்கோணமலை, குருநாகல், புத்தளம், சிலாபம், அனுராதபுரம், வதுளை, மொனராகலை, இரத்தினபுரி, கேகாலை.

எந்தவொரு நிலையத்திலும் போதியளவு பரீட்சார்த்திகள் தோன்றுவிட்டால் அந்நிலையம் தவிர்க்கப்படலாம்.

**குறிப்பு.**—சேர்க்கப்படும் பெண்களின் வீதம் அரசாங்கத்தால் தீர்மானிக்கப்பட்டவாறாகும்.

2. **பரீட்சார்த்திகள் பரீட்சை எழுதவேண்டிய மொழி.**—பரீட்சார்த்திகள் இப்பரீட்சைக்குத் தோன்றுவதற்குத் தகுதியளிக்கும் பரீட்சையை எந்த மொழியில் எழுதிச் சித்தியெய்தினர்களோ அந்த மொழியிலேயே இப்பரீட்சையைச் செய்தல் வேண்டும் (அதாவது சிங்களத்தில் அல்லது தமிழில் அல்லது ஆங்கிலத்தில்), எனினும்—

(அ) தகுதியளிக்கும் பரீட்சையின் பல்வேறு பாடங்களையும் வெவ்வேறு மொழிகளில் எடுத்துச் சித்தியெய்திய பரீட்சார்த்தி ஒருவர் அவற்றுக்கு நேரொத்த பாடங்களை இப்பரீட்சையிலும் அவ்வம் மொழிகளிலேயே செய்தல் வேண்டும். ஏனைய பாடங்களை 14 ஆம் பந்தியிலுள்ள (1) ஆம் பாடத்தைச் (அதாவது பாஷையும் வியாசமும்) செய்யும் மொழியிலேயே செய்தல் வேண்டும் ;

(ஆ) 5 (iii) ஆம் பந்தியில் விதிக்கப்பட்டுள்ள கல்வித் தகைமைகளில்லாத 6 (i) ஆம் பந்தியிற் குறிப்பிடப்பட்டுள்ள தற்காலிக உதவிச் சிறுப்பர்மார் தாங்கள் கற்றுள்ள மொழிமூலம் இப்பரீட்சையை முற்றாக எழுதலாம். தமிழில் அல்லது ஆங்கிலத்தில் கற்றுள்ள ஒருவர் தான் விரும்பினுல் சிங்களத்தில் இப்பரீட்சையை எழுதலாம் ;

(இ) தகுதியளிக்கும் பரீட்சையைத் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் சித்தியெய்தியுள்ள பரீட்சார்த்தியொருவர் அல்லது தமிழில் அல்லது ஆங்கிலத்தில் கற்றுள்ள பரீட்சார்த்தி ஒருவர் தான் விரும்பினுல் இப்பரீட்சையைச் சிங்களத்தில் எழுதலாம்.

3. **சேவை நிபந்தனைகள்.**—(i) இவ்வர்த்தமானியில் I ஆம் பாகத்தில் II ஆம் பிரிவின் தொடக்கத்திற் பிரசுரிக்கப்பட்டுள்ள, அரசாங்க சேவைப்பகுதி நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளைப் பார்க்க.

(ii) இப்பரீட்சையில் சித்தியடையும் ஆண் பரீட்சார்த்திகள் நியமனத் தேதியிலிருந்து மூன்று ஆண்டுக்காலத் தகுதிகாண் நிலையில் நியமிக்கப்படுவர். இவர்களின் பதவிகள் உபகாரச் சம்பளத்துக்குரியவை.

(iii) இப்பரீட்சையில் சித்தியடையும் பெண் பரீட்சார்த்திகள் சகாயநிதி அடிப்படையில் முதலில் நியமிக்கப்பட்டு, நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டுக் காலத்துக்குச் சோதனை நிலையிலிருப்பர். அவர்கள் 10 ஆண்டுச் சேவை முடியமுன்னர் உபகாரச் சம்பள நிலையில் சேருவதற்குத் தம் விருப்புரிமையை உபயோகிக்க உரிமையுடையவராவர். இவ்விருப்புரிமையை ஒருமுறை பிரயோகித்தால் அதை மீட்கமுடியாது. சோதனை

காலத்தில் தமது விருப்புரிமையைப் பிரயோகிக்கும் பெண் பரீட்சார்த்திகள் அதற்குப் பின்னர் தகுதிகாண் நிலையில் வைக்கப்படுவர் ; தகுதிகாண் காலம் அவர்கள் இன்னும் சேவை செய்திராத சோதனைக் காலத்துக்குச் சமமானதாகும்.

(iv) அவர்கள் இடமாற்றத்துக்காளாவர். இலங்கையில், எந்நிலையத்திற்காவது அனுப்பப்படலாம்.

(v) அரசகரும மொழிக் கொள்கை நோக்கத்திற்காகப் " புதிதாகச் சேர்ந்தோர் " எனக் கருதப்படும் சித்தியடைந்த பரீட்சார்த்திகள் 1956 ஆம் ஆண்டில் 53 ஆம் இலக்க அரசகரும மொழிச்சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை நிறைவேற்றுவதற்காக ஏற்கெனவே செய்யப்பட்டுள்ளனவும் வருங்காலத்தில் செய்யப்படக் கூடியனவுமான எந்தச் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகவேண்டும். என்னும் நிபந்தனையை ஏற்றல்வேண்டும்.

சிறுப்பர்களாக நியமிப்பதற்குத் தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள், அரசகரும மொழிக் கொள்கை நோக்கத்திற்காகப் " புதிதாகச் சேர்ந்தோர் " ஆனால், அவர்கள் தம்முடைய தகுதிகாண்/சோதனைக்காலத்தில் அரசகரும மொழியாகிய சிங்கள மொழியில் தேர்ச்சிபெறல் வேண்டும். தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் இப்பரீட்சார்த்திகளை உறுதிப்படுத்தல் அவர்களின் திருத்திகரமான வேலையையும் நடத்தையையும் விதிக்கப்பட்டுள்ள சிங்களத் தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியெய்துவதையும் பொறுத்திருக்கும்.

(vi) தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் பின்வருமாறு பிணை கொடுத்தல் வேண்டும் :—

(அ) 2,000 ரூபாவில் உத்தரவாத முறி.

(ஆ) 2,500 ரூபா காசு.

(ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள காசுப்பிணையை தொடக்கத்தில் 1,250 ரூபாவாகவும் பின்னர் ஒவ்வொரு மாதமும் தவணைப்பணமாக 20 ரூபாவும் ஈற்றில் 10 ரூபாவாகவுமாய் 2,500 ரூபாவையும் செலுத்தலாம். அதன்பின்னர் குறித்த உத்தியோகத்தர் விரும்பினால் 10 ரூபா மாதத் தவணைப்பணமாக காசுப்பிணை 4,000 ரூபாவாகும்வரை தொடர்ந்து செலுத்தி உத்தரவாதச் சங்கமூலப் பிணையை நிறுத்தலாம்.

4. **சம்பளம்.**—பரீட்சையில் சித்தியெய்துவோர் சிறுப்பர் சேவையின் III ஆம் வகுப்பில் பின்வரும் திரட்டிய சம்பள வீதத்தில் நியமிக்கப்படுவர். ஆரம்பச் சம்பளம் ஆண்டுக்கு 3,000 ரூபா. ஆண்டுக்கு 90 ரூபா வீதம் 24 ஆண்டு ஏற்றத்துக்குப் பின்னர் 5,160 ரூபா பெறுவர். இந்தச் சம்பளத் திட்டத்தில் ஆண்டுக்கு 3,900 ரூபா பெறுமுன்னர் தகைமைத் தடைப்பரீட்சையுண்டு.

அரசாங்க மொழிக் கொள்கைகளின்படி புதிதாகச் சேர்ந்தோர் எனக் கொள்ளப்படும் அச்சித்தியெய்திய பரீட்சார்த்திகள் ஆண்டுச் சம்பளம் 1,320 ரூபா ஆவதற்கு முன்னுள்ள தகைமைத் தடையைக் கடக்க முன்னர் சிரேட்ட தராதரப்பத்திரப் பரீட்சைத் தாத்துக்கொப்பான பரீட்சையில் சிங்கள மொழியில் சித்தியெய்தல் வேண்டும்.

5. **தகவுத் திறன்.**—பொது நிபந்தனைகள் :

(i) பரீட்சார்த்தி பண்புடையராயிருத்தல் வேண்டும்.

(ii) பரீட்சார்த்தி இலங்கையராயிருத்தல் வேண்டும்.*

(iii) பரீட்சார்த்திகள் பின்வருவனவற்றில் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும் :

(அ) மொழி, எண்கணிதம் அல்லது தூயகணிதம் அல்லது ஆரம்ப கணிதம் அல்லது வர்த்தக கணிதம் உட்படக் குறைந்தது நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் இலங்கைச் சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம்.

(ஆ) இலண்டன் மற்றிக்குலேசன் தராதரப் பத்திரம் அல்லது கேம்பிரிச்சு சீனியர் தராதரப் பத்திரம்.

(இ) பின்வருவனவற்றில் பொதுக்கல்வித் தராதரப் பத்திரம் (சாதாரணதரம்) :—

(1) சிங்களம்/தமிழ் மொழி.

(2) எண்கணிதம் அல்லது தூயகணிதம் அல்லது ஆரம்ப கணிதம் அல்லது வர்த்தக கணிதம்.

(3) பிற நான்கு பாடங்கள், ஆனால் இப்பாடங்களுள் ஐந்தில் ஒரேயொருமுறையில் சித்தியடைந்திருத்தலுடன், மொழி எண் கணிதம் அல்லது தூயகணிதம் அல்லது ஆரம்ப கணிதம் அல்லது வர்த்தக கணிதம் உட்படக் குறைந்தது நான்கு பாடங்களிலேனும் திறமைச் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஈ) சிரேட்ட மனையியற்கலைத் தராதரப் பத்திரம்.

(உ) இலங்கை கல்வித் திணைக்களத்துச் சிங்கள/தமிழ் வர்த்தகத் தராதரப் பத்திரம்.

**குறிப்பு.**—மேலே கூறப்பட்டுள்ள பரீட்சைகளில் எதையாவது எடுத்து இப்பரீட்சைக்குரிய விண்ணப்பங்களின் முடிவுத்தேதிக்கு முன்னர் அதன் பெறுபேறு கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

(iv) 1970, ஓகத்து 1 ஆந் தேதியில் பரீட்சார்த்திகள் 17 வயதுக்குக் குறையாமலும் 22 வயதுக்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.

5A. **தகவுத்திறன். இலங்கையிலுள்ள ஐக்கிய இராச்சியச் சேவையிற் சேர்ந்திருக்கும் சிவில் உத்தியோகத்தர்களுக்கும் யுத்தப் படைகளில் முன் சேவையாற்றியவர்களுக்குமான விசேட சலுகைகள் :—**

ஐக்கிய இராச்சியச் சேவையிலிருந்து 1956 ஆம் ஆண்டு, யூலை மாதம் 6 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கும் அல்லது தளங்களை எடுத்துக்கொள்ள அரசாங்கம் நிச்சயித்ததன் பயனாக வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கும் இலங்கையரான சிவில் உத்தியோகத்தர்களுக்கும், நாராகென்பிற்றவில் (அண்டேசன் நிலையம்) இருந்த இராச கடற்படைக் கம்பியில்லா நிலையத்தை திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள பெரிய கரைச்சி என்னும் இடத்துக்கு மாற்ற அரசாங்கம் நிச்சயித்ததன் பயனாக, 1954 ஆம் ஆண்டு செற்றம்பர் மாதம் 27 ஆந் தேதிக்குப் பின் அந்நிலையத்திலிருந்து நீக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கும் பின்வரும் சலுகைகள் உரியனவாகும் :

(i) 5 (iv) ஆம் பந்தியில் விதிக்கப்பட்டிருக்கும் வயதெல்லையின் பொருட்டு வயதைக் கணிப்பதில் ஐக்கியராச்சியச் சேவைகளில் அவர்கள் சேவையாற்றிய காலத்தைத் தங்கள் வயதில் இருந்து கழித்துக் கொள்ள அனுமதிக்கப்படுவர் ; ஆனால் அப்படிச் செய்வதற்கு அத்தகைய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருந்திருக்க வேண்டும்.

(ii) 1970 ஆம் ஆண்டு யூன் மாதம் 29 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் ஐக்கியராச்சியச் சேவைகளில் தொடர்ச்சியாக குறைந்த பட்சம் நாலு ஆண்டுச் சேவை திருப்திகரமாக முடித்து, 5 (iii) ஆம் பந்தியில் விதிக்கப்பட்டிருக்கும் கல்வித் தகைமைகளைக் கொண்டிருக்காதவர்கள், 6 (iii) A (அ) ஆம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் பரீட்சைகளில் ஒன்றிலாவது சித்தியடைந்த பின், இப்பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர்.

5B. **தகவுத்திறன், யுத்தச் சேவைகளில் முன்னைநாள் சேவையாற்றியவர்கட்கு விசேட சலுகைகள்.—**

(i) 5 (iv) ஆம் பந்தியில் விதிக்கப்பட்டிருக்கும் வயதெல்லையின் பொருட்டு வயதைக் கணிப்பதில் படைச் சேவை முன்னைநாட் சேவையாளர், அதாவது, நியமப் படையில் சேவை செய்த பின்னர் ஒதுக்கப்படைக்கு மாற்றப்பட்ட படைச்சேவை உறுப்பினர் அல்லது அச்சேவையில் அவமானம் சூட்டி விலக்கப்பட்ட, அல்லது பதவி நீக்கம் செய்யப்பட்ட அல்லது இழுக்குடன் பதவி நீக்கப்பட்ட, அல்லது எவ்வொழுக்கவீனம் காரணமாகவேனும் சேவையிலிருந்து விலகவேண்டியிருந்தவர்கள் அல்லாத படைச் சேவையை விட்டு விலகிய உத்தியோகத்தர்களும் சேவையாளர்களும் நியமப் படையில் தாம் ஆற்றிய சேவைக்காலத்தைத் தம் வயதில் இருந்து கழித்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர் ;

(ii) நியமப்படையில் நாலாண்டுக்குக் குறையாத காலச் சேவையாற்றி 5 (iii) ஆம் பந்தியில் விதிக்கப்பட்டிருக்கும் தகைமைகளைக் கொண்டிருந்தவர்கள் 6 (iii) A (அ) பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் பரீட்சைகளில் ஒன்றிலாவது சித்தியடைந்திருப்பின் இப்பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர்.

5C. **தகவுத்திறன், ஆட்குறைப்பின் பயனாக வேலையிழந்த அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான விசேட சலுகைகள்.**—நிரந்தரமுறையிலோ தற்காலிக முறையிலோ அரசாங்க சேவையிலிருந்து வேலையோ ஒழுக்கமோ திருப்திகரமாயில்லை என்ற காரணத்தினாலன்றி வேறு காரணங்களால் வேலையிழந்திருப்பவர்கள் பின்வரும் சலுகைகளுக்கு அருகராவர் :

5 (iv) ஆம் பந்தியில் விதிக்கப்பட்டிருக்கும் வயதெல்லையின்பொருட்டு வயதைக் கணிப்பதில், பதவியிலிருந்து நீக்கப்பட்டது அல்லது திருப்தியற்ற வேலை அல்லது பதவியிலிருந்து தாமாக விலகிக்கொண்டது காரணமாக வேலையிழக்காத அரசாங்கத்திற் சேவையாற்றிய காலத்தைத் தம் வயதிலிருந்து கழித்துக்கொள்ள அவர்கள் அனுமதிக்கப்படுவர்.

6. **தகவுத்திறன் அரசாங்க ஊழியர்களுக்கு விசேட சலுகைகள்.—**
(i) 1970 ஆம் ஆண்டு யூன் மாதம் 29 ஆந் திகதியன்று 2 ஆண்டுகள் தொடர்ந்து சேவைசெய்து முடித்தவர்களான தற்காலிக உதவிச்சிறுப்பர்கள் 1970 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 1 ஆந் திகதியன்று 45 வயதுக்குக் குறைந்தவர்களாயிருப்பின், கல்வித் தராதரங்களைக் கவனியாது இப்பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர்.

(ii) பந்தி 6 (i) இல் குறிப்பிட்டுள்ள சலுகைக்குத் தகுதியற்றவர்களாய் அரசாங்க சேவையில் தற்காலிக பதவிகளை வகிப்பவர்கள் :—

(அ) பந்தி 5 (iii) இல் கொடுக்கப்பட்டுள்ள கல்வித் தராதரங்கள் உள்ளவர்களாகவும் ;

(ஆ) 1970 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 1 ஆந் தேதியன்று 45 வயதுக்குட்பட்டவர்களாகவும் ;

---

*அரசாங்க சேவையிற் சேர்தற்கான சகல நோக்கங்களுக்காகவும் " இலங்கையர் " என்ற பதம் பரம்பரையாக அல்லது பதிவு செய்யப்பட்ட ஓர் இலங்கைப் பிரசை என்று பொருள்படும்.

(இ) 1970 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிக்கு நேரடுத்து முந்தி அரசாங்கத்தின் கீழ் குறைந்தது ஓராண்டாவது திருப்திகரமாகத் தொடர்ந்து சேவை செய்து முடித்தவர்களாகவுமிருப்பின் இப்பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர்.

(ii) A, பந்தி 6 (i), 6 (ii) இல் குறிப்பிட்டுள்ள சலுகைக்குத் தகுதியற்றவர்களாயிருப்பினும் 1970 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிக்கு நேரடுத்து முந்தி அரசாங்கத்தின் கீழ் குறைந்தது 4 ஆண்டுகள் தொடர்ந்து சேவை செய்து முடிந்தவர்களாக அரசாங்க சேவையில் தற்காலிக பதவிகள் வகிப்பவர்கள் ;

(அ) 6 (iii) A (அ) பந்தியில் குறிப்பிட்டுள்ள கல்வித் தகைமையுடையவர்களும் ;

(ஆ) 1970 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 1 ஆந் திகதியன்று 45 வயதுக்குட்பட்டவர்களாகவும் இருப்பின் இப்பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர்

(iii) கீழே குறிப்பு (iii) இல் உள்ள விதிவிலக்குகளுக்கு அமைவாய் 1970 ம் ஆண்டு மே மாதம் 19 ஆந் தேதியில் அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவிகளை வகிப்பவர்கள் :—

(அ) பந்தி 5 (iii) இல் கொடுக்கப்பட்டுள்ள கல்வித் தராதரங்கள் உள்ளவர்களாகவும் ;

(ஆ) 1970 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 1 ஆந் தேதியன்று 45 வயதுக்குட்பட்டவர்களாகவும் இருப்பதுடன் ;

(இ) அவர்களின் சேவைகள் திருப்திகரமானவையென அவர்களது திணைக்களத் தலைவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அவர்கள் சிறுப்பர் சேவைக்கு நியமிக்கப்படத் தெரிந்தெடுக்கப்படின் திணைக்களத் தலைவர்கள் அவர்கள் விடுவிக்கத் தயாராயிருக்குமிடத்து ; இப்பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவார்கள்.

(iii) A. 1970 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் தேதிக்கு உடன் முந்திக் குறைந்தபட்சம் தொடர்ச்சியான நாலாண்டுச் சேவை அரசாங்கத்தின் கீழ் முடித்திருக்கும் நிரந்தரப் பதவியிலுள்ள அரசாங்க உத்தியோகத்தர்கள் (iii) ஆம் குறிப்பில், கீழே தரப்பட்டுள்ள விதிவிலக்குகளுக்கு அமைவாய் இப்பரீட்சையெடுக்க அனுமதிக்கப்படுவர் :—

(அ) அவர்கள் பின்வருவனவற்றில் ஒன்றை உடையவராயிருத்தல் வேண்டும்.

(i) கேம்பிரிச்சு கனிட்ட தராதரப்பத்திரம் ;

(ii) கல்வித் திணைக்களத்தின் க. பா. த. ப. ;

(iii) கல்வித் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பாடசாலையின் க. பா. த. ப. ;

(iv) இலண்டன் வணிகக் கழகத்தின் இலங்கைத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் வர்த்தக கல்வித் தராதரப்பத்திரம் பொது வர்த்தக அல்லது சுருக்கெழுத்துத் தட்டெழுத்தாளர் பிரிவு) (வெளிநாடுகள்) அல்லது உயர்தர கல்வித் தராதரப் பத்திரம் (பொது வர்த்தக அல்லது சுருக்கெழுத்துத் தட்டெழுத்தாளர் பிரிவு) (வெளி நாடுகள்) ;

(v) இலங்கை வணிகக் கழகத்தினுலும் இலங்கை கல்வித் திணைக்களத்தினுலும் வழங்கப்படும் வர்த்தகக் கல்வித் தராதரப்பத்திரம் (பொது வர்த்தக அல்லது சுருக்கெழுத்துத் தட்டெழுத்தாளர் பிரிவு) அல்லது உயர்தர வர்த்தக கல்வித் தராதரப்பத்திரம் (பொது வர்த்தக அல்லது சுருக்கெழுத்து தட்டெழுத்தாளர் பிரிவு) ;

(vi) கல்விப் பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள தொழினுட்பக் கல்லூரிகளால் அளிக்கப்படும் (கணக்குப் பதிபவர்க்கான அல்லது சுருக்கெழுத்து தட்டெழுத்தாளர்) வர்த்தக தராதரப்பத்திரம் அல்லது உயர்தர வர்த்தக தராதரப் பத்திரம்.

(ஆ) 1970 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் முதலாம் திகதியன்று 45 வயதுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும் ; அத்துடன்

(இ) அவர்களுடைய திணைக்களத் தலைவர்கள் அவர்களுடைய சேவை திருப்திகரமானவை என அத்தாட்சிப்படுத்துவதோடு அவர்கள் சிறுப்பர் சேவையில் நியமிக்கப்படுவதற்குத் தெரிவு செய்யப்பட்டால் அவர்களை விடுதலை செய்வதற்குத் தயாராகவுமிருத்தல் வேண்டும்.

குறிப்பு—

(i) 1956 ஆம் ஆண்டு செற்றம்பர் மாதம் 24 ஆந் தேதிக்கு முன் நியமிக்கப்பட்டு, மேற்போந்த 6 (iii,) 6 (iii) A வகைகளிற் சேர்ந்து இப்பரீட்சையிற் சித்தி எய்துபவர்கள் அரசாங்க மொழிக் கொள்கையின் நோக்கத்துக்காக " முன்னர்ச் சேர்ந்தவர்கள் ; என்று கருதப்படுவர்.

(ii) இவ்வறிக்கையின் 6 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைவாய் இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் இவ்வர்த்தமானப் பத்திரிகையின் I ஆம் பாகம் (II) ஆம் உட்பிரிவின் தொடக்கத்தில் வெளியிடப்பட்ட பொது நிபந்தனைகளிற் காணப்படும் யுத்த சேவைச் சலுகைகளுக்கு அருகதையுடையராகார்.

(iii) அளவைத் திணைக்கள எழுதுவினைஞர், வரைவாளர் சேவை, இரப்பர் கட்டுப்பாட்டுத் திணைக்கள எழுதுவினைஞர் சேவை, தேயிலைக் கட்டுப்பாட்டுத் திணைக்கள எழுதுவினைஞர் சேவை, பிரதிநிதிகள் சபை எழுதுவினைஞர் சேவை, ஆசுப்பத்திரி எழுதுவினைஞர் சேவை, புகையிரத எழுதுவினைஞர் சேவை, அஞ்சல் எழுதுவினைஞர் சேவை, சுங்க எழுதுவினைஞர் சேவை, உள்ளூராட்சிச் சேவை ஆணையாளர் எழுதுவினைஞர் சேவை ஆகிய திணைக்கள எழுதுவினைஞர் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களும் மாணவ ஆசிரியர்களும் உள்ளூராட்சிச் சேவை ஆணைக்குழு ஊழியர்களும் சபைகளும் கூட்டுத்தாபனங்களும் அவற்றை ஒத்த தன்னாட்சியுள்ள சபைகளும் 1963.12.4 இன் 629 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள வகுதிகளுள் அடங்கும் நிரந்தர, தற்காலிக, அமய ஊழியர்களும் படைச் சேவையிலும் இலங்கைப் பொலிசுச் சேவையிலுமுள்ள உத்தியோகத்தர்களும் 6 (iii), 6 (iii) A பந்திகளின் கீழ் இப்பரீட்சையெடுப்பதற்குத் தகுதியுடையவராவர். எனினும் இப்பொழுது ஆட்சேர்ப்பு நிறுத்தப்பட்டுள்ள திணைக்கள எழுது வினைஞர் சேவை உத்தியோகத்தர்கள் தகுதியுடையவராவர்.

7. **விண்ணப்பங்கள்.**—(i) இவ்வறிவித்தலின் இறுதியில் மாதிரி விண்ணப்பப்படிவம் வெளியிடப்பட்டுள்ளது. பரீட்சார்த்திகள் குறிப்பிடப்பட்ட மாதிரிப் படிவத்திற் கிணங்கத் தமது சொந்த விண்ணப்பப்படிவங்களை ஒரு முழுத்தாளின் அரைத்தாளில் **தாம் பரீட்சை எடுக்க உத்தேசித்துள்ள மொழியில்** தயாரித்துத் **தமது சொந்தக் கையெழுத்தில்** நிரப்புதல் வேண்டும். இதன் பொருட்டு ஒரு தாளே உபயோகிக்கப்படல் வேண்டும். 1 முதல் 6 வரையுள்ள கூடுகள் 1 ஆம் பக்கத்திலும் 7, 8, 9 ஆம் கூடிகள் 2 ஆம் பக்கத்திலும் (படிவத்தின் பின்புறத்தில்) இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பங்கள் பதிவு அஞ்சலில் பரீட்சை ஆணையாளர், த. பெ. இல. 1503, கொழும்பு 2 என்னும் விலாசத்தை 1970, யூன் 30 ஆந் தேதியோ அதற்கு முன்னரோ சென்றடையுமாறு அனுப்பப்படல் வேண்டும். அத்தேதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பம் எதுவும் நிராகரிக்கப்படும். கடித உறையின் மேற்பக்கத்து இடதுபுற மூலையில் பரீட்சைப் பெயரும் நிலையமும் தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

(iii) விண்ணப்பத்தில் 25 ரூபா முத்திரையொட்டப்பட்டு அது பரீட்சார்த்தியின் கையொப்பத்தினுலும் தேதியினுலும் முறையே அழிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(iv) ஏற்கனவே அரசாங்க திணைக்களங்களில் வேலை செய்துவரும் பரீட்சார்த்திகள் தங்கள் விண்ணப்பங்களைத் தாங்கள் வேலை செய்யும் அரசாங்கப் பகுதிகளின் தலைமை அதிகாரிகளின் மூலமாக அனுப்புதல் வேண்டும். பந்தி 5C இன் பிரகாரம் தகுதியுரிமை கோரும் பரீட்சார்த்திகள் விண்ணப்பங்களைத் தாம் கடைசியாக வேலை செய்த அரசாங்கப் பகுதிகளின் தலைமை அதிகாரிகள் மூலமாக அனுப்புதல்வேண்டும். எந்தப் பரீட்சார்த்தியாவது இங்ஙனம் செய்யத் தவறினுல் அவர் தகுதியற்றவராகக் கருதப்படுவார். 1970 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் பரீட்சை ஆணையாளருக்குக் கிடைக்கத்தக்கதாகத் தங்கள் விண்ணப்பங்களை அனுப்பும்படி கேட்டு அவற்றைத் தாம் வேலை செய்யும் அரசாங்கத் திணைக்களங்களின் தலைவர்களுக்கு நேரகாலத்துடன் அனுப்பிவைக்கும்படி பரீட்சார்த்திகள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

விண்ணப்பங்கள் நேராகப் பரீட்சை ஆணையாளரின் பெயருக்கோ அல்லது அத்திணைக்களத்திலுள்ள பிற உத்தியோகத்தர் எவருக்குமோ அனுப்பப்படலாகாது.

8. **பரீட்சைக்கு அனுமதி.**—(i) பரீட்சை ஆணையாளர் தாம் ஏற்றுக்கொண்ட விண்ணப்பங்களுக்குரிய பரீட்சார்த்திகளுக்கெல்லாம் அனுமதிப் பத்திரங்கள் வழங்குவார். பரீட்சைக்குத் தோன்றும் பரீட்சார்த்திகள், அப்பரீட்சையை மேற்பார்வையிடுவதற்காக நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தருக்குத் தங்கள் அனுமதிப் பத்திரங்களைக் காட்டுதல்வேண்டும். அத்தகைய பத்திரத்தைக் காட்டத்தவறும் ஒரு பரீட்சார்த்தி பரீட்சையெடுப்பதற்கு அனுமதியளிக்கப்படமாட்டார்.

பரீட்சார்த்திகள் தங்களுக்குக் குறிக்கப்பட்ட பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சையை எடுத்தல்வேண்டும். தமக்குக் குறிக்கப்பட்டதல்லாத பிறிதொரு பரீட்சை மண்டபத்துக்குச் சமூகமளிக்கும் ஒரு பரீட்சார்த்தி பரீட்சையெடுப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சைத் தினத்தன்று தமது அனுமதிப் பத்திரத்தை மேற்பார்வையாளரிடம் கொடுத்துவிடல் வேண்டும்.

பரீட்சார்த்திகளுக்குரிய விதிகள் இவ்வறிவித்தலுக்குப் பின்னுல் புறம்பாக அச்சிடப்பட்டுள்ளன. பரீட்சார்த்திகள் இவ்வறிவித்தலுக்குக் கட்டுப்பட்டவராவர்.

பரீட்சைத் தினத்துக்குக் குறைந்தபட்சம் ஏழு நாட்களுக்கு முன்னுகவாவது பரீட்சார்த்தியொருவர் தமது அனுமதிப்பத்திரத்தைப் பெருதிருந்தால், மலாய் வீதி, தபாற்பெட்டி 1503, கொழும்பு 2 (தந்தி விலாசம் : " பரீட்சைகள் " கொழும்பு), என்னும் விலாசத்திலுள்ள

பரீட்சை ஆணையாளரோடு தாமதமின்றித் தொடர்பு கொண்டு, தமக்கு அனுமதிப்பத்திரம் கிடைக்கவில்லையென்பதை பின்வரும் தகவலைக் கொடுத்து அறிவித்தல்வேண்டும் :—

(1) பரீட்சையின் பெயர் ;

(2) முழுப்பெயர் ;

(3) முழு அஞ்சல் விலாசம் ;

(4) பரீட்சார்த்தி பரீட்சையை எடுப்பதற்கு விண்ணப்பஞ்செய்துகொண்ட பரீட்சை நிலையம் ;

(5) தபாற் கந்தோரும் பதிவிலக்கமும் விண்ணப்பம் அனுப்பிய தேதியும்.

**(ii) பரீட்சைக்கு அனுமதியளிக்கப்படுவது தகுதியுடைமையை ஒப்புக் கொண்டதாகாது.** எனினும், பரீட்சை ஆணையாளர் தமது உசிதாசாரப்படி, பரீட்சார்த்தி யொருவருக்கு இப்பரீட்சையை எடுப்பதற்குத் தற்காலிகமாக அனுமதி வழங்கலாம். அத்தகைய பரீட்சார்த்தி பரீட்சையெடுத்தமை, பின்னர் ஒன்றில் உறுதிப்படுத்தப்படும் அல்லது தள்ளுபடி செய்யப்படும்.

**9. அடையாளச் சீட்டுகள்.**—பரீட்சார்த்திகள் தாங்கள் எடுக்கும் ஒவ்வொரு பாடத்துக்கும் பரீட்சை மண்டபத்திலே மேற்பார்வையாளர் திருத்திப்படும் வகையில் தங்கள் அடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுவர். இந்த நோக்கத்துக்காகப் பின்வரும் சாதனங்களில் ஏதாவதொன்று ஏற்றுக்கொள்ளப்படும் ;

(அ) தபாற் கந்தோர் தலைமை அதிபதி வழங்கிய அடையாளச்சீட்டு.

(ஆ) இப்பரீட்சைத் தேதிக்குமுன் 3 ஆண்டுக்கு மேற்படாத காலத்தில் வழங்கப்பட்டதும் வலிவுள்ளதுமான ஒரு பிரயாண அனுமதிச் சாதனம் (பாஸ்போட்) ;

(இ) இப்பரீட்சைத் தேதிக்குமுன் 3 ஆண்டுக்கு மேற்படாத காலத்தில் ஓர் அரசாங்க திணைக்களத்தில், பொதுக் கூட்டுத்தாபனத்தில் அல்லது மற்றும் நியதிச்சட்டமுறையான அமைப்பின் அதிகாரத்தோடு வழங்கப்பட்டதும், வைத்திருப்பவரின் புகைப்படமொன்றைத் தன்னகத்துக் கொண்டதுமான ஏதாவதோர் அத்தாட்சிப் பத்திரம் அல்லது உத்தரவுப்பத்திரம் அல்லது பிற சாதனம் ;

(ஈ) கடவுச்சீட்டின் (பாஸ்போட்) அளவுள்ள புகைப்படம், அதன்பின் பக்கத்தில் கீழ்க்காட்டப்படும் அத்தாட்சி, அவ்வாறு அத்தாட்சிப் படுத்தக்கூடியவர் ஒருவரால் கையொப்பப் படிவத்தில் இருத்தல் வேண்டும். " பிற்புறத்திலுள்ள புகைப்படம் (..........பரீட்சார்த்தியின் முழுப் பெயர்) என்பவருடையதென்பதையும் அன்னாரின் கையொப்பம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதென்பதையும் நான் அத்தாட்சிப்படுத்துகிறேன். "

——————,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

——————,
அத்தாட்சி செய்பவரின் கையொப்பம்.

——————,
பெயரும் பதவியும்.

தேதி : ——————.

மேலே குறிப்பிட்டுள்ள சாதனங்களில் ஒன்றைக் கொண்டுவராத பரீட்சார்த்தியொருவரின் பரீட்சையுரிமை தற்காலிகமானதெனக் கருதப் படும். பரீட்சை அதிகாரியின் தற்றுணிபுப்படி அத்தகைய பரீட்சையுரிமை நிராகரிக்கப்படலாம்.

**10. தகுதிச்சாதனங்கள்**

(i) விண்ணப்பத்தோடு எவ்வித சாதனங்களும் சேர்த்து அனுப்பப் படலாகாது ; ஆனல் பத்திரத்திலேயே கேட்கப்பட்டவாறு தேவையான, விவரங்களெல்லாம் கொடுக்கப்பட்டிருத்தல் வேண்டும். இந்த வகைகளி லெல்லாம் நிறைவுபெற்றிராத ஒரு விண்ணப்பம் அதன் தகுதிக்கேற்பச் சீர்தூக்கி ஆராயப்பட்டு, நிராகரிக்கப்பட்டினும் படலாம்.

(ii) தகைமைபெற்ற பரீட்சார்த்திகளிடமிருந்து, அவர்கள் தங்கள் தகுதியுடைமையை நிறுவுவதற்காகச் சாதனச் சான்று வேண்டப்படும். அத்தகைய பரீட்சார்த்திகள், நேர்முகப் பரீட்சை வைக்கப்பட்டால், அப் போது இச்சாதனங்களைக் காட்டுதல் வேண்டும். அல்லது பரீட்சை அதிகாரி கேட்கும்போது, தாமதமின்றி அவற்றைப் பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

(iii) பின்வரும் சாதனங்கள் தேவையாகும் :—

(அ) பொறுப்புள்ள ஒருவராற் கையொப்பமிடப்பட்டுள்ள ஒரு நாற் சான்றுப்பத்திரம்.

**குறிப்பு.**—பரீட்சார்த்தி அரசாங்க பாடசாலையில் அல்லது உதவி பெறும் பாடசாலையிற் கல்வி கற்பவராய் அல்லது அண்மையில் விலகியவராயிருந்தால் அத்தகைய பாடசாலை அதிபரிடமிருந்தே நற்சான்றுப்பத்திரம் பெறுதல்வேண்டும் ; அல்லாவிடின் அதை ஒரு சமாதான நீதவானிடமிருந்தோ, வழக்கறிஞரிடமிருந்தோ, நியாயதுரந்தரரிடமிருந்தோ, நொத்தாரிசிடமிருந்தோ, 4,800 ரூபாயோ அதற்கு மேலோ ஆண்டுத் திரட்டிய சம்பளமாகப் பெறும் ஒரு நிரந்தரமான அரசாங்க உத்தியோகத்தரிடமிருந்தோ பெற்றுக் கொள்ளலாம் ; அல்லது பொதுவாகக் கூறுமிடத்து, பிரசித்தி பெற்றவரும் சாதாரணமாக அறியப்பட்டவருமான ஒருவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அல்லது நற்சான்றுப் பத்திரம் வழங்குபவரின் பெயரும், பதவியும் விலாசமும் அதில் தெளிவாகக் காட்டப்படல்வேண்டும்.

அரசாங்க உத்தியோகத்தில் நிரந்தரமான பதவிகளை வசிக்கும் பரீட்சார்த்திகள் நற்சான்றுப்பத்திரங்கள் காட்டுமாறு வேண்டப்பட மாட்டார்.

(ஆ) பரீட்சார்த்திகளின் பிறப்புப் பதிவின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஒரு பிரதி அல்லது (பிறப்புப் பதிவு செய்யப்படாத பரீட்சார்த்தி களின் பொருட்டு) பதிவுக் காரியகர்த்தரால் கொடுக்கப்பட்ட விசேட வயதுச் சாட்சிப்பத்திரம் ;

பிறப்புச்சான்றற்ற பரீட்சார்த்தி ஒருவர் தமது நேர் தகவு வயதுச் சான்றிதழை மட்டுந் தரும்பொழுது அவர் அச்சான்றிதழிற் குறிப்பிடும் பிறப்பாண்டின் யூலை முதலாந் தேதி பிறந்தவராகக் கருதப்படுவர்.

**குறிப்பு :**

(i) பாடசாலைத் தேவைகளுக்கு அல்லது கல்வித் தேவைகளுக்கு வழங்கப்பட்ட விசேட பிறப்பத்தாட்சிப்பத்திரமோ, பிறப்புப் பதிவினின்றும் எடுக்கப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட பகுதியோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

(ii) சத்தியக்கடுதாசியோ ஞானஸ்நான அத்தாட்சிப்பத்திரங்களோ பிறப்பத்தாட்சிப்பத்திரங்களுக்குப் பதிலாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

(iii) பிறப்பத்தாட்சிப்பத்திரத்திலுள்ள பெயர்/பெயர்கள் பரீட்சார்த்தி சாதாரணமாக உபயோகிப்பதும் இப்பரீட்சை யெடுப்பதற்காக கொடுக்கப்பட்டதுமான பெயரினின்றும் வேறுபட்டால் பிறப்புப் பதிவிலுள்ள பெயரைத் திருத்துவதற்கு, (அத்தியாயம் 110) பிறப்பு இறப்புச் சட்டத்தின் 27 ஆம் அல்லது 28 ஆம் பிரிவின் நியதிகளின்படி (சந்தர்ப்பத்திற்கேற்ப) உடனே நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

அரசாங்க உத்தியோகத்ததில் இருந்துகொண்டு 18.8.57 இன் 394 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தம் பெயர்களை மாற்றியிருக்கும் பரீட்சார்த்திகள் பிறப்புப் பதிவிடாப்பில் உள்ள தம் பெயர்களை மாற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்கப்படமாட்டார்கள்.

(இ) இலங்கைப் பிரசையெனப் பதிவு செய்யப்பட்டதற்குரிய பதிவத் தாட்சிப்பத்திரம் அல்லது பரம்பரைப் பிரசையென்னும் கோரிக் கையை ஏற்றுக்கொள்ளும் உத்தியோகபூர்வமான மூலக்கடிதம் (ஏற்புடையவிடத்து).

(ஈ) கல்வித் தகைமை பற்றிய மூல அத்தாட்சிப்பத்திரம், அல்லது அத்தாட்சிப்பத்திரம் வழங்கப்படாதிருக்குமிடத்து, உத்தியோக பூர்வமான பிரசாதனம் (உ-ம் : இலங்கைப் பொதுக் கல்வித் தராதரப் பத்திரம், சாதாரண தரம் ; தனிப்பட்ட பரீட்சார்த்தி களுக்கு வழங்கப்பட்ட பெறுபேற்று அறிவிப்புத் துண்டு ; அல்லது பரீட்சார்த்தியின் பாடசாலை அதிபரிடமிருந்து பெற்ற மூலக்கடிதம்).

(உ) இலங்கையில் உள்ள ஐக்கிய இராச்சியச் சேவைகளில் ஒரு சிவில் உத்தியோகத்தரிடமிருந்து சேவையாற்றியதற்கான சான்றிதழின் மூலப்பிரதி அல்லது போர்ப்படைகளில் சேவையாற்றியதற்கான சான்றிதழ் (5எ, 5பீ பந்தியில் காட்டப்பட்ட பரீட்சார்த்திகள் விடயத்தில்).

(ஊ) அரசாங்கத்தின் கீழ்ச் சேவையாற்றியதற்கான மூலப்பிரதி (5சி பந்தியில் காட்டப்பட்ட பரீட்சார்த்திகள் விடயத்தில்).

(எ) அடையாளச் சீட்டு (நேர்முகப் பரீட்சை நடந்தால்) அப்போது மாத்திரம்.

(iv) விண்ணப்பம் செய்யும்போது தேவையான சாதனங்கள் எல்லா வற்றையும் ஆயத்தமாக வைத்திருக்குமாறு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். " நேர்முகப் பரீட்சை " நடந்தால், அப்போது தேவையான சாதனங்களைக் காட்ட முடியாமல் இடர்ப்படும் அல்லது பரீட்சை அதிகாரி கேட்கும்போது அவற்றை அனுப்பிவைக்கத் தாமதிக்கும் எப்பரீட்சார்த்திகளினதும் பரீட்சைக்கான பதிவு நிராகரிக்கப்படும்.

**11. பொய்யான விபரங்கள் கொடுப்போருக்குரிய அபராதம்**

இப்பரீட்சைக்குரிய பிரமாணங்களின்படி, பரீட்சார்த்தியொருவர் தகுதி யில்லாதவர் எனக் காணப்பட்டால் பரீட்சைக்கு முன்போ, பரீட்சை நடக்கும் போதோ, பரீட்சைக்குப் பின்போ எந்நிலையிலாவது, அவரைப் பரீட்சார்த்தியென்று அனுமதித்தமை தள்ளுபடி செய்யப்படுவதற்கு ஏதுவாகும்.

பரீட்சார்த்தியொருவர் கொடுத்துள்ள விபரங்களில் எவையேனும் அவருடைய அறிவுக்கு உட்படப் பொய்யானவை எனக் காணப்பட்டால் அல்லது அவர் வேண்டுமென்றே முக்கியமான உண்மையெதையும் மறைத்திருந்தால், அல்லது அவர் நியமனம் பெற்றுச் சேவை செய்யுங்காலத்தில் எப்போதாவது அவர் இப்பரீட்சையெடுப்பதற்குத் தகுதியற்றவர் என்பது நிரூபிக்கப்பட்டால், அவர் சேவையிலிருந்து உடனே விலக்கப்படுதற்கு ஆளாவர். இவ்வறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ள தேவைகளுக்குக் கண்டிப்பாக இணங்கி ஒழுகத் தவறுவோரின் பரீட்சை உரிமை நிராகரிக்கப்படும்.

இந்தக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள தேவைகளுக்கிணங்கி ஒழுகாத பரீட்சார்த்திகளின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

**12. பணந் திருப்பிக் கொடுத்தல்**

எச்சந்தர்ப்பத்திலாவது பணம் எதுவும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. இப்பரீட்சைக்காகக் கொடுத்த கட்டணங்களை வேறெப் பரீட்சைக்கேனும் மாற்றமுடியாது.

**13. பரீட்சையெடுப்பதற்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு விடுதலை**

பரீட்சை அதிகாரியினுல் ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுக்குரிய உத்தியோகத்தர்கள் பரீட்சைக்குத் தோன்றுவதற்காக, அவர்களுக்கு அவர்களுடைய திணைக்களத் தலைவர்கள் விடுதலை (கடமை விடுதலையன்று) வழங்குமாறு வேண்டப்படுகின்றனர்.

**14. பரீட்சைத் திட்டம்**

இப்பரீட்சை இரு பகுதிகளாக நடாத்தப்படும். அவையாவன : பகுதி I (எழுத்துமூலப் பரீட்சை), பகுதி II (நேர்முகப் பரீட்சை).

பரீட்சைக்குரிய பாடங்களும், ஒவ்வொரு பாடத்துக்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளும் இதன் கீழ் தரப்பட்டுள்ளன. விடைப்பத்திரங்கள் யாவற்றிலும் அவலட்சணமாக எழுதுவதற்கும் எழுத்துக் கூட்டலில் பிழைவிடுவதற்கும் புள்ளிகள் கழிக்கப்படும். விளங்கிக் கொள்ள முடியாத முறையில் எழுதும் பரீட்சார்த்திகள் தகுதியற்றவர்களாகப்படுதற்கு ஆளாவர்.

| பகுதி I —எழுத்துமூலப் பரீட்சை | புள்ளிகள் |
|---|---|
| (1) பாஷையும் வியாசமும் (சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம்)—இது ஒன்றரை மணித்தியால விஞப்பத்திரமாகும். வியாசம், சுருக்கி எழுதல் பாஷையைச் சரியாக உபயோகிப்பதைச் சோதிக்கும் கேள்விகள் என்பவற்றை இது கொண்டிருக்கும் .. .. .. | 100 |
| (2) எண்கணிதம் (சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம்)—இது ஒன்றரை மணித்தியால விஞப்பத்திரமாகும் ; இதில் எண்கணிதம், பலவகையான இருபுறக்கூட்டல், கூட்டல்கள் என்பன உட்பட எண்களையிட்ட சரியான அறிவைச் சோதிக்கும் கேள்விகள் அடங்கும் .. .. | 100 |
| (3) பொது அறிவு (சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம்)—30 நிமிட விஞப்பத்திரம் .. .. | 50 |
| (4) விவேகப் பரீட்சை (சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம்)—30 நிமிட விஞப்பத்திரம் .. .. | 50 |

இப்பரீட்சைக்கான நேரசூசி பின்வருமாறு :—

| | |
|---|---|
| மு.ப. 8.30—மு.ப. 10.00 .. | பாஷையும் வியாசமும் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) |
| மு.ப. 10.45—பி.ப. 12.15 .. | எண்கணிதம் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) |
| பி.ப. 1.30—பி.ப. 2.00 .. | பொது அறிவு (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) |
| பி.ப. 2.45—பி.ப. 3.15 .. | விவேகப்பரீட்சை (சிங்கள/தமிழ்/ஆங்கிலம்) |

பரீட்சை ஆணையாளர் நேரசூசியின் பிரதிகளை வழங்கமாட்டார். ஆகவே பரீட்சார்த்திகள் தமது தேவைக்காக இந்த நேரசூசியைக் கவனிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

**பகுதி II — நேர்முகப் பரீட்சை** .. .. 50

பரீட்சார்த்தி இப்பரீட்சை முழுவதையும் எந்த மொழியில் எடுக்கின்றுரோ அந்த மொழியிலேயே நேர்முகப் பரீட்சையும் நடாத்தப்படும்.

முதற்கண் எழுத்துப் பரீட்சை நடாத்தி, அதன் பெறுபேறுகளைக் கொண்டு நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிப்பதற்குப் போட்டிமுறையிற் பரீட்சார்த்திகள் தெரிவுசெய்யப்படுவர் ; இந்த நேர்முகப் பரீட்சை கொழும்பில் நடைபெறும் ; இதற்குரிய தேதி அவர்களுக்கு அறிவிக்கப்படும். நேர்முகப் பரீட்சைக்கு எத்தனை பேர் அழைக்கப்படல்வேண்டுமென்பதைத் திறைசேரி இணைப்பிரதிச் செயலாளர், பரீட்சை ஆணையாளரோடும் கலந்தாலோசித்துத் தீர்மானிப்பர். எனினும், ஆளில்லாவிருக்கும் இடங்களின் எண்ணிக்கையிலும் பார்க்க, பரீட்சையில் தேறும் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை குறைவாயிருந்தால் நேர்முகப்பரீட்சையை நடாத்தாமலும் விடலாம்.

**15. முடிவுகளைப் பிரசுரித்தலும் நியமனங்கள் கொடுத்தலும்**

சித்தியடைந்த பரீட்சார்த்திகளின் பெயர்கள் இலங்கை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்படும் ; ஏற்ற வெற்றிடங்கள் ஏற்படும்போது அவர்களுக்கு நியமனங்கள் கொடுக்கப்படும்.

**16. வெற்றிடங்கள்**

இப்பரீட்சையின் முடிவின் பின்னர் நிரப்பவேண்டிய பதவிகளின் தொகையை, சேவையின் உண்மையான தேவைகளைக் கவனித்துத் திறைசேரி இணைப்பிரதிச் செயலாளர் தீர்மானிப்பர்.

**17. வைத்தியப் பரீட்சை**

தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் இலங்கையின் எப்பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடனலமுள்ளவரோவென அறிவதற்காக வைத்திய பரீட்சையொன்றில் சித்தியடைதல் வேண்டும்.

18. இப்பிரமாணங்களில் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயமும் திறைசேரிப் பிரதிச் செயலாளரின் தற்றுணிபின்பேரில் கையாளப்படும்.

பி. டி. உடுவெல,
திறைசேரி இணைப்பிரதிச் செயலாளர்.

பொதுத் திறைசேரி,
கொழும்பு,
1970 ம் ௵ மே ௴ 19 ந் ௳.

## விண்ணப்பப் படிவம்

**பரீட்சைத் திணைக்களம், இலங்கை**

**சிறுப்பர் சேவையில் III ஆந் தரத்துக்கு ஆட்சேர்க்கும் பரீட்சை ஒகத்து, 1970**

சுட்டிலக்கம் :

(அலுவலக உபயோகத்திற்காக)

பால் :

1. குடும்பப் பெயர், முதலெழுத்துக்களுடன் : ————.

2. முதலெழுத்துக்கள் குறிப்பிடும் பெயர்கள் : ————.

3. முழு அஞ்சல் விலாசம் : ————.
(அரசாங்க சேவையிலுள்ளோர் தங்கள் அரசகரும விலாசங்களைக் கொடுத்தல் வேண்டும்).

4. நீர் பரீட்சையெடுக்க விரும்பும் நிலையம் :—
முதல் தேர்வு : ————.
இரண்டாம் தேர்வு : ————.

5. (அ) நீர்—
(i) பரம்பரையாகவா, அல்லது
(ii) பதிவு வழியாகவா இலங்கைக் குடியென்பதைக் கூறுக.

(ஆ) பிறந்த இடம்—
(i) பரீட்சார்த்தி : ————.
(ii) பரீட்சார்த்தியின் தகப்பன் : ————.
(iii) பரீட்சார்த்தியின் தகப்பன் வழிப்பாட்டன் : ————.
(iv) பரீட்சார்த்தியின் தகப்பன்வழி முப்பாட்டன் : ————.

**குறிப்பு**—பரீட்சார்த்தியும் அவர் தகப்பனும் இலங்கையில் பிறந்தவராயின் (i) (ii) ம் நிரப்பப்படல் வேண்டும். பரீட்சார்த்தி அல்லது அவர் தகப்பன் இலங்கைக்கு வெளியே பிறந்தவராயின் (i), (ii), (iii), (iv) நிரப்பப்படல் வேண்டும்.

6. தகவுத் திறன்—
(அ) நீர் இப்பரீட்சையில் போட்டியிடுவதற்குத் தகவளிக்கும் இவ்வறிவித்தலுள்ள பந்தியையும் உபபந்தியையும் தெளிவாகக் கூறுக : ————.
(ஆ) பிறந்த தேதி : ————.
(இ) கல்வித் தகைமைகள் : ————.

7. நான் மேலே அளித்துள்ள கூற்றுக்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவையெனவும் நான் இங்கு ஒட்டும் முத்திரைகள் உண்மையானவையும் முன்னர் உபயோகிக்கப்படாதவையுமெனவும் சான்றளிக்கின்றேன்.
(ii) இப்பரீட்சைப் பிரமாணங்களுக்கிணங்கியொழுகச் சம்மதிக்கின்றேன்.

8. முத்திரையின் கூடு. முக்கியமானது—பரீட்சார்த்தி இங்கு 25 ரூபா பெறுமதியான முத்திரைகளையொட்டி தமது கையொப்பத்தையும் தேதியையும் அவற்றின் மேல் எழுதுவதன் மூலம் அவற்றை அழித்தல் வேண்டும். முத்திரைகள் ஒன்றன்மேல் ஒன்று ஒட்டப்படலாகாது.

| முத்திரைக் கூடு<br>ரூபா 25 |
|---|

————,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

9. பரீட்சார்த்தியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :—

...................... வதிபவரும் வேலைபார்ப்பவரும் நான் நன்கு அறிந்தவருமான ......................................* என்பவர் 1970 ...................ஆந் நாளில் என் முன்னிலையில் தமது கையொப்பமிட்டார் என நான் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

(அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்) :————.

பெயர், பதவிப் பெயர், நிலை :————.

விலாசம் :————.

*அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பக்காரரின் கையொப்பம் அவரது திணைக்களத் தலைவரால் அல்லது அவர் சார்பில் அவ்வாறு செய்வதற்கு அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

பிற விண்ணப்பக்காரரின் கையொப்பம் அத்தாட்சிப்படுத்தற்கு அதிகாரம் பெற்றுள்ள ஒருவரால் அவ்வாறு செய்யப்பட வேண்டும். அஃது. சமாதான நீதவான், சத்திய ஆணையாளர், வழக்கறிஞர், நொத்தாரிசு, அரசாங்க அல்லது பணிப்பாளரின் முகாமையிலுள்ள பள்ளிக்கூட முதல்வர், கடற்படை, வான்படை, தரைப்படையிலுள்ள ஆணை பெற்ற உத்தியோகத்தர், ஆண்டுக்கு 4,800 ரூபாவோ அதற்கு மேற்படவோ திரட்டிய சம்பளம் பெறும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர், புத்த கோயிலின் பிரதான பொறுப்பாளர் அல்லது உயர் நாயகம், அல்லது வழிபாட்டுத் தலத்துக்குப் பொறுப்பாகவுள்ள அல்லது முக்கிய தானம் வகிக்கும் பிறசமய மதகுரு ஒருவர்.

## பரீட்சைப் பகுதி. இலங்கை

### பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகள்

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சாதிகாரியின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர் :—

(i) முழுப் பரீட்சையிலிருந்தும் நிறுத்தி வைக்கப்படுவர் அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் ஒரு பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்.

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்.

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம் வரை பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமற் தடுத்து வைக்கப்படுவர்.

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விஷயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும் பொழுதோ, பரீட்சைக்குப் பின்னரோ, தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால், அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும் அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம், அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

### விதிகள்

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணு நடந்து கொள்ளவேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் பொழுதும் வெளியேறும் பொழுதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்திற் பூரண அமைதி நிலவச் செய்யவேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றப் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானல் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையை விட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக் கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமுஞ் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமானமுறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத் தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டுபோதல் கூடாது. அத்தகைய விடையெழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ் விதிக்கு மாருக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக்கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்தபின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேகவும் அனுமதிக்கப்படுவர் ; செய்கைமுறை அல்லது வாய்மொழிப் பரீட்சையைப் பொறுத்தவரையில் தாமதித்து வந்த ஒரு பரீட்சார்த்தியை, மேற்பார்வையாளர் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக்கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணுக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடத்து கொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப்புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலும் சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியனவற்றை ஒழுங்காகக் கீறிவிட வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாருக நடந்தால் அது ஏமாற்றுவதற்கான எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனே செய்கை வழியில்லாமலோ சரியான விடைகளிருந்தால் சித்திரத்தில் அலங்காரரூபச் சித்திரமும் கருத்துவெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினேடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக்கூடாது. தேவைக்கு வேண்டியமாதிரி வர்ணப்பெட்டியையே கணிதக் கருவிப்பெட்டியையோ விட கைப்பை, அழகுசெய் செப்பு, பார்சல் முதலியவற்றை, கோவை அட்டை, கடதாசிமட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப் பத்திரிகை, மாட்டுத்தாள் முதலிய வற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்குள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்துள்ளிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகமோ குறிப்புகளோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்குத் தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினல் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பங்களிலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனல், பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்ல விடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும் மீண்டுவரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

14. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோகுறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக் கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறெவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின் கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல்,

பிழையான விபரங்களை சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் ஒரு பரீட்சார்த்திக்கு நேர்மையலலாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகளுக்கு:**

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி மேல்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் :—

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தபட்சம் 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுதற்குரிய தகுதியைப்பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்கு முன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். அல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்துக்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக் கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப் பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டுவருதல் வேண்டும். தேவையான உறுதிப் பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடின் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமைநிராகரிக்கப்படக்கூடும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்து போனால் பரீட்சை முடியு முன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத் தாள், கணனரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால், அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல்மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுபட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப்பென்சில்கள், வர்ணக் கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதிசெய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடை யெழுதும் தாளில் இருபக்கத்திலும் துப்புரவாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்கு மிடையில், ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும் அல்லது சில வெற்றுக் கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றேடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில், வினவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலது பக்கத்து அடைப்பு பரீட்சகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமான கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளின் முறையான அமைப்பு முறையில் தருக. வரைப்படங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைப்படத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறு படத்தைக் காட்டி எழுதப்படும் விடை விடைத்தாளின் மறுபக்கத்திலும் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்படவேண்டும்.

(ix) ஒவ்வொரு படத்தின் முடிபிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக் கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற்போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகனிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக் காட்ட வேண்டும்.

கே. ரி. டபிள்யூ. சுமனசூரிய,
பரீட்சை ஆணையாளர்.

பரீட்சைப் பகுதி,
மலே வீதி,
கொழும்பு 2.

5–678—29.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,908.

---

திறைசேரி இல. 1/102/47 (ஜி)

## மொழிபெயர்ப்பாளர் சேவையின் ஆட்சேர்ப்பதற்குப் பரீட்சை—1969 மே மாதம்

1969, மே மாதம் 22 ஆந் தேதி நடாத்தப்பெற்ற பரீட்சை முடிவின் பேரில் கீழ்க் கூறப்பட்ட பரீட்சார்த்திகள் மொழிபெயர்ப்பாளர் சேவையில் நியமிக்கப்படுவதற்குத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| பெயர் | முகவரி |
|---|---|
| ஆரியதிலக, பீ. எஸ். | .. கூட்டுறவு அலுவலகம், மாத்தளை |
| கருணசேன, ஜி. ஏ. | .. மா/கப்புகம வித்தியாலயம், தென்துறை |
| மானப்பெரிகே, ஜே. | .. பிரதான பொறிமுறை எஞ்சினியர் அலுவலகம், இ. அ. பு., இரத்மலானை |
| சோமசுந்தர ஐயர், எஸ். | .. விலைமதிப்புத் திணைக்களம், கொழும்பு 7 |
| விக்கிரமநாயக்க, ஜே. டி. | .. தேர்தல் அலுவலகம், களுத்துறை. |

பீ. டி உடுவெல,
திறைசேரி, இணைப் பிரதிச் செயலாளர்.

பொதுத்திறைசேரி,
கொழும்பு,
1970 ம் ஆண்டு மே மீ 16 ந் உ.

